Reg. No. M. 2324.　　　　　　　　　　தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.]　　　　1928ஆம் செப்டம்பர் மீ 13உ　　　　[No. 37.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	721
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	723
3.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	725
4.	தமிழ்ப் பாடம்	727
5.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L.	730
6.	இராமனும் இலக்குமணனும் T. M. கலியாணராமய்யர்	732
7.	புருரவன் தபுதார நிலை T. N. சேஷாசலம் B. A., B. L.	734
8.	மதிப்புரை	736
9.	வர்த்தமானம்	739

கலா நிலயம்.

கூண்டை உடைத்தால் குருவி வருமோ?

இந்தியர்கள் இந்நாள் ஜீவனற்ற சடங்குகளில் கட்டுண்டு அடிமைகளாய் உழல்கின்றனர் என்னும் வசை உலகெங்கும் உலவி வருகின்றது. இந்தவிதம் நம்மை ஏசுபவர் அயல் நாட்டோர் மாத்திரமேயாயின் நாம் அதைப் பொருட்படுத்தாமல் சும்மாவிருந்து விடலாம். ஆனால் குருட்டுப் பழக்க வழக்கங்களைக் காட்டிக் காட்டித் தம்மைத் தாமே வன்மையொடு தகைந்து கொள்பவர் இந்தியர்களேயுமாயிருப்பதால் எத்துணையளவு இவர் இவ்வசைக்குப் பாத்திரரா யிருக்கின்றன ரென்பதைச் சிறிது இங்கு ஆராய்வோம்.

தகுதியற்ற வொருவன் தன்னையே தான் புகழ்ந்துகொள்வது நகை விளைக்குமெனில், இகழ்ச்சிக்கு இடமில்லாத தன்னைப்பற்றி ஒருவன் தன்னையே இகழ்ந்துகொள்வது மிகவும் இரக்கமான செய்தியாம். தொன்றுதொட்டு வருகின்ற மதாசார குலாசார தேசாசார கட்டுப்பாடுகளுக்கு நம்மிற் பெரும் பகுதியோர் பழையன கழிக்காமல் புதியன புகுத்தாமல் அடங்கி ஒழுக முயல்வதும் முயல்வதாகப் பாவிப்பதும், பழிப்பிற் கிடமான தென்பர் பலர். கலியாணம் முதலிய சடங்குகளின் பொருளறியாமல் அவைகளைப் பின்பற்றி வருதல் பேதைமையென்பர் சிலர். எல்லாம் குருட்டு வழக்கம் மூடபக்தி என்று யாவரும் ஏசுவார் ஏங்குவார். ஆகையாற்றான் இந்நிலைமைக்குத் தாழ்ந்து விட்டோம் என்று இரங்குவார். கறங்குபோல் திரிந்து இவைகளைச் சீர்திருத்தத் தேடுவார்.

இவ்வாறு ஏசியும் ஏங்கியும் இரங்கியும் திரிந்தும் அமைகின்றவர்களுள் அறிவும் ஆராய்ச்சியும் எள்ளளவேனு மில்லாத ஒரு சிறு பகுதியினரே, "சாஸ்திரமாவது சம்பிரதாயமாவது! சாதியாவது மதமாவது! சடங்காவது வேதமாவது! இவைகளெல்லாம் பொய்" என்று அவைகளையே மறுத்து, "நம்மை வாழவொட்டாமல் கட்டிவைக்குந் தளைகளல்லவோ, இவை! இவைகளையெல்லாம் பிய்த்துக்கொண்டு மனம்போனபடி போயலையக் கூடியவராதல்தான் விடுதலை யடைந்ததாகும்" என்று பிதற்றுகின்றவர். இருட்டிற் கஞ்சாத குருட்டுக் கண்ணுடைய அந்தகரை நிகர்க்கும் இத்தகையவர் இழுதைக ளென்பதை உலகமுழுவதும் அறியுமாதலால் காசுக்குதவாத அன்னாருரையைக் கருத்திலே வைத்துப் பேசுவதும் வீண்காலம்போக்குவதாகும்.

இச்சிறு பகுதியோர் கிடக்க, நாம் இக்காலம் கையாளும் ஆசாரங்களை அவமதிப்போர்களுள் பெரும் தொகையினரான மறுபகுதியோர், சாஸ்திர சம்பிரதாய ஆசாரங்களின் உண்மைத் தத்துவத்தை அறியாராயினும் அவைகளை யெல்லாம் பொய்யென்று மறுத்துவிடத் துணியாராகி, இவ்வாசார அநுட்டானங்களெல்லாம் முன்காலத்தில் தக்கனவாகவே அமைந்திருந்திருத்தல் வேண்டுமெ

ன்றும் மாறிய இக்காலத்திற்கேற்ற கோலம் பூண்டு அவைகளிற் பெரும்பகுதியை அகற்றி விடுதலே விடுதலை யுணர்ச்சியை வளர்ப்பதாகு மென்றும் வாதித்து வருபவராகின்றனர். முழுவதுமே இது பொருளழிந்த உரையன்று. இக்காலம் நாம் அக்கால ஆசார அநுட்டானங்களை மாத்திரம் விடாப்பிடியாய் வைத்திருப்பதால் பயனில்லை என்று இவர் கூறுவதில் உண்மை பெரிதுளது. ஆனால் தாங்களடைந்துவிட்ட மாறுபாட்டைக் காலத்தின் மேலேற்றி, அது மாறி யிருக்கின்றதென்று நினைத்து மறுபடி அவ்வேற்றுமைக்கு ஏற்றவாறு ஆசார அநுஷ்டானங்களைப் பற்றியவரையில் நாம் மாறவேண்டு மென்பதெல்லாம் மதிக்குரிய மயக்கத்தால் பிறந்த விபரீதமேயன்றி வேறில்லை.

இனி நுண்ணறிவும் கல்விநலமும் தத்துவ உணர்ச்சியும் வாய்ந்த கவி இரவீந்திர நாதர்போன்ற சிற்சிலர் மதம் குலம் என்னும் ஆசார அநுட்டானங்களின் மெய்த்திறத்தையும், பொதுவாக எந்நாளும், சிறப்பாகச் சிலபோதும், இந்திய மாந்தர் செய்யவேண்டுமென் றமைந்திருக்கின்ற சடங்குகளின் அவசியத்தையும், சாஸ்திர பூர்வமாய் எடுத்துக் காட்டுவதற்கு இல்லாமற் போகவில்லை. இரவீந்திரநாதர் எழுதியுள ஓர் கட்டுரையின்கண்,

> "விடுதலை பெறுவதற்கேற்ற முறையைக் கையாள்வோன் ஒருவன் தன் இச்சையைக் கட்டிவைத்தல் வேண்டும். அப்பொழுது தான் அதன் சக்தியும் வேகமும் சிதைவடைந்து வீண்படாமல் காக்கப் பெறும்..... விடுதலை என்பது தளைகளின் மூலமாய்த் தான் அடையக்கூடும்; கட்டுப்பாடு என்னும் மூலதனத்தைக்கொண்டு ஈட்டிய இலாபம் விடுதலை."

என்பன போன்ற வாக்கியங்களைக் காண்கின்றோம். ஆசார முறைகளுக்கும் ஆன்றோர் வகுத்த பண்டை வழக்கங்களுக்கும் சாஸ்திர விதிகளுக்கும் அடங்கி நடப்பதே விடுதலை யடைவதாம், என்னும் கருத்துடைய இரவீந்திரநாதர் போன்ற பெருமக்கள் சிற்சிலர் இருக்கின்றனர். "விடுதலை யென்பது கட்டுக் கடங்கல்" என்னும் வாக்கியத்தின் பொருள் முரணுடையதுபோல் தோன்றினும், ஆழ்ந்து நோக்கினால் அதுவே உண்மையைத் தெள்ளிதின் செப்புகின்றதென எண்ணுகின்றோம். ஐம்புலன்கள் தாம் அவாவியவாறு அலையாமல் கட்டுண்டிருக்க இந்தியர்கள் செய்து வந்த பயிர்ச்சி முறைகளின் அம்சங்களாய் இவ்வாசார அநுட்டான சடங்குகள் அமைந்திருந்தன. அவர் குறிகொண்ட நோக்கம் அந்தத்தில் ஆன்ம விடுதலை அடைவதே யாகையால், இவ்வாசாரம் முதலியவைகள் அதனிற்கு இன்றியமையாத ஆதாரங்களாய் நின்றன. சாணக்கியர் வகுத்துரைத்த வண்ணம் இந்தியர், குடும்பத்தின் நன்மைக்காகத் தம் தனி உரிமையையும், குலத்தின் நன்மைக்காகக் குடும்பத்தின் உரிமையையும், நாட்டின் நலத்திற்காகச் சாதி குலம் என்னும் இவைகளின் உரிமையையும், ஆன்மாவிற்காக உலகத்தையுமே துறப்பதைப் படிப்படியாகத் தலைமேற் கொண்டு தம் வாழ்க்கையைத் திறம்படச் செலுத்தினர். ஆன்மவிடுதலையில் தம் முழுநாட்டத்தையும் செலுத்தி இருந்தவர்க்கு ஆசார அநுட்டான சடங்குகள் கட்டமாகத் தோன்றி யிராதது ஆச்சரியமல்ல.

வாழ்நாள் வழிவழிச் சிறந்தோங்க அற்றைநாள் ஜீவனுக்கு ஜீவனாய்நின் றியக்கியது இந்நோக்கம். தற்கால நிலைமையின் உண்மையாதெனில், ஜீவனாயிருந்த இவ்வான்ம விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கம் இருந்தஇடம் தெரியாமல் மறைந்து போய், அந்த இடத்தில் அதனைச் சுற்றியிருந்த சடங்குகள் முதலியனவே குப்பையாய்க் குவிந்து கிடக்கின்றதென்பதாம். குருவியோ பறந்துவிடக் கூண்டே தொங்குகின்றது. நம் தேசம் அடைந்த கதி இதுவே. சாதிமத கட்டுப் பாடுகளுக்கும் ஆசார அநுட்டான சடங்குகளுக்கும் நாம் இன்னும் அடிமைகளா யிருக்கின்றோம். ஆனாலோ அவைகளின் நோக்கமாயிருந்த சுதந்தரமும் முத்தி நிலையும் இப்பொழுது நம் கருத்திலேனும் கருமங்களிலேனும் காண்பதில்லை. நமது நோக்கத்தை மறந்தோம், இவ்வாசார அநுட்டானங்களுக் கடங்கி ஒழுகும் முயற்சியின் பெருமைக்கு உணர்ச்சி யற்றவர்களாயினோம்! எஞ்சியது என்னெனில், திறனிலா மூட நம்பிக்கையும் குருட்டு வழக்கங்களுமே. ஆதலால், அநுட்டானச் சடங்குகள் யாவும் இந்தியர்களின் ஒரு பகுதியோரை மறு பகுதியோர் விதிகளாலும் விலக்குக்களாலும் பயமுறுத்தித் தாழ்த்தி வைக்கச் சூழ்ந்தவொரு சூழ்ச்சியென யாவரும் எங்கும் நிந்திக்கின்றபோதெலாம் சிலர் உற்றெழுந்து வெகுளலாமேயன்றி அவ்வசையை மறுத்துரைக்கு மாற்றலற்றவர்களா யிருக்கின்றனர்.

நுண்ணறிவால் ஆராயவல்ல யாவரும் இந்தியா இழிவடைந்த தென்று ஏசுவதின் உண்மை இன்னதே என்று ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் இந்தியர்களின் மதாசார குலாசார அநுட்டான சடங்குகளைச் "சீர் திருத்தம்" செய்யவேண்டுமென்று செப்பி இடையறு முயற்சியோடு உழைப்பவர்தம் சொற்களும் செய்கைகளுமோ வியப்பைத் தரத்தக்கனவா யிருக்கின்றன. பறவை போனபின் பஞ்சரத்தைப் பாராட்டுவது மதியீனமென்பதற் கையமில்லை. "உயரிய நோக்கங்கள் அகன்றபின் அவைகளுக்கு ஆதாரமாயிருந்த இவ்வநுட்டானங்களை ஏனின்னும் கொன்னே போற்றித் திரிகின்றீர்," என்று அவர் இடித்துரைக்கும் வரையில் தக்கதே செய்கின்றனர். ஆயின் பறவை போன வருத்தத்தாலும் கோபத்தாலும் கூண்டைப் போட்டுடைப்பது போலல்லவோ, அவர் அநுட்டானங்களை அழிக்க முயல்வது முடிகின்றது. பறந்தகன்ற பறவையை மீண்டும் பற்றி வருவதற்கான முயற்சிகளைச் செய்வதொன்றே நலமாம். இழந்து நிற்கின்றோம் என்றறிந்த ஆன்ம உணர்ச்சியை மீண்டு மடைவதற் கேற்றன செய்வதன்றோ அறிவிற் கழகு. கூண்டை உடைத்து விட்டால் போன குருவி வந்து விடுமென்று கூற வொண்ணுமோ. 'சீர் திருத்தம்' என்று பேசுவோர்களில், அறிவுடைய ஒரு சிலர் தவிர, மற்ற யாவரும் கூண்டை யுடைத்துக் கொள்ளியாக்குவதன்றி வேறெதனையும் கருதினவர்களாக வேனும், கருதவல்லவர்களாக வேனும் காணப்பட்டிலர்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[704-ம் பக்கத் தொடர்ச்சி]

உயிர் தவழும் உடலம்.

சேக்கிழார் கண்ணப்பரினழகை எங்ஙனம் கூறுகின்றார்! வடிவினைப் புகழ்ந்துரைப்பவர்கள் அடிமுதல் தலையீறாகவும் தலை முதல் அடியீறாகவும் இருவகையாகப் புனைந்துரைப்பது மரபு. இங்கே சேக்கிழார் தலைமுதல் அடியீறாகப் புகழ்கின்றார்.

நாயனாரது தலைமயிரைப் புதர்போலடர்ந்த செம்பட்டைமயிர் என்பார் நக்கீரர். ஆனால் சேக்கிழாரோ "மைவிரவு நறுங்குஞ்சி" என்கின்றார். கன்னங்கறேல் எனக்கறுத்து வீச்சுநாற்றமில்லாமல் நல்ல நறுமணங் கமழ்வது எனப் புகழ்கின்றார். ஒழுங்காக இருப்பதனை இங்குக் குறிக்க "நெறிகொண்ட குஞ்சி" என்கின்றார். தலைமயிர்க்கழகு சுருண்டிருத்தல் அன்றோ? அவ்வழகோடு அடர்ந்த தலைமயிர்கள் காற்றினால் கீழ்விழுந்தும் மேலெழுந்தும்ஆடிச் சுற்றிலும் பரவி நிற்பதனைச்சுட்டிக் காட்டுகின்றார். பெரியாழ்வார் கண்ணனைப் புகழ்ந்துரைக்கையில்

> "செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டுகள்போல்
> பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப"

என்று இவ்வழகினைப் புகழ்ந்துரைத்தல் காண்க. இவ்வுவமை ஒன்று கூறாது மற்றவை எல்லாம் கூறினார் சேக்கிழார். இளந்தளிர்களைக்கொண்டு கட்டிய கண்ணிமாலையைத், திண்ணனாரது தலையைச்சுற்றி வளைத்தார்கள். அந்தக் கண்ணிமாலைக்கிடையே சுட்டி சாத்தியது போல மயிர்ப்பீலியைச் சேர்த்துக் கட்டினார்கள். தேனோடு கூடியவையாய்த் திகழ்வதால் தேனீக்கள் மாலை மாலையாய் மொய்த்துக்கிடக்கும் புத்தம் புதிய குறிஞ்சிப்பூக்களையும் வெட்சிப் பூக்களையும் முல்லைமாலையிலே செருகித் தலைக்குப்பின்னால் கட்டிப் பின்னழகு செய்தனர். இனி முன்னெற்றியிலேயும் முன்னழகு செய்தனர். மயிலிறகின் வெள்ளிய அடி இடத்தில் குன்றிமணியைப் புதைத்து, அவற்றை ஒழுங்காக மயிரோடு திரித்துக் கற்றையாக்கி முன்னே பிரிந்து போகாதபடி அழுத்தமாகக் கட்டினார்கள். கண்ணன் கொண்டைபோலக் கட்டினார்கள்போலும். கட்டுக்கடங்காத மயிர்கள் சுருண்டு காற்றில் அலைந்தன. காதில் அணிந்திருந்த வெண்டோடு முகத்தின் இருபக்கத்திலும் திங்களைப்போல விளங்கின. அந்தத் தோடுகளில் உள்ள சங்கு வளையங்கள் கரியமேனிக்கு அருகே பளிச்சென்று மின்னிப் பொலிந்தன. வெள்ளை வெளேர் என மாசுமறுவின்றி விளங்கும் பலகறைகளை மாலையாகக் கோத்துக் கழுத்தில் திண்ணனார் அணிந்திருந்தனர். சங்கு மணியையும், மற்றுமுள்ள பல மணிகளையும், மாற்றி மாற்றிக் கோத்து, இடைஇடையே நிலாப்பிறை மாலைபோல விளங்கும் பன்றியின் கோரைப்பற்களைத் தொங்கவிட்டு ஒரு அழகிய மாலையாக ஆடவிட்டு அணிந்திருந்தனர். உறுதியான புலித்தோலினால் வட்டவடிவமாகச் செய்த சன்ன வீரமானது அவற்றிற்கிடையே நடுமணியாக விளங்கிற்று. யானைத் தந்தத்தால் சிறிய வடிவமாகச் செய்த மணிகளைக் கொண்டு கோத்த மாலை மார்பிலே தாழ இருந்தது. பொன்னும் மணியும் கொண்டு செய்த தோள்வலயங்கள் தோளிலே பூ மாலையோடு மின்னிமின்னி விளங்கின. முன்னங்கையிலே விலையுயர்ந்த காப்பானது தன்னை மேலே எடுத்துக் காட்டுவதுபோல ஒளியோடும் விளங்கிற்று. அதற்கு அருகே வில்நாண் எறியும்போது விசையால் கைத்தசைபிய்த்துக்கொண்டு போகாதபடி ஓர் தடையாகக் கைச்செறிகட்டி என்னும் தோற்பட்டை கட்டி இருந்தார். அரையிலே புலித்தோலாலாகிய சல்லடம் ஒன்று அணிந்திருந்தார். அதன் மேலே மயிற் பீலிகளைச் சாரவைத்துக் கட்டினார். அத்தோலுடையின் ஓரத்திலே விளிம்பாகப் பலகறைகளைக் கோத்து அழகுபட அணிந்தார். அரசன் என்பதனைக் காட்டும் உடைதோலையும் சுரிகைக் கத்தியையும் இடுப்பிற் செருகிவைத்தார். இவை யெல்லாம் கீழ்சரிந்து விழாதபடி மணமுள்ள துவர்ப்புப் பட்டையில் ஊறவைத்துப் பதனிட்டுப் பட்டுப்போலாக்கிய விலையுயர்ந்த வார் ஒன்றைக் கச்சாகக் கட்டிக் கொண்டார். செம்பொன்னாலும் மணியாலும் செய்த கழலினைக் காலில் கட்டினார். கண்டவர்கள் எல்லாம் அணிந்து நடப்பதற்கு விரும்பும் அத்தகைய நீண்ட செருப்பொன்றை மாட்டிக் கொண்டார். பிறர் தூக்கமுடியாத அத்துணை பெரிய வில்லைத் தமது வலது கையில் தூக்கிக்கொண்டார். வின்னாண் எறிந்த மிடுக்கினையும் வியந்து பாராட்டுகின்றார் நம் புலவர்.

> நெறிகொண்ட குஞ்சிச் சுருடுஞ்சி நிமிர்ந்து பொங்க
> முறிகொண்ட கண்ணிக் கிடைமொய்யொளிப் பீலி
> [சேர்த்தி
> வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
> செறிகொண்டவன் டின்குலஞ்சேர்சொளப் பின்புசெய்து
>
> முன்னெற்றியின் மீது முருக்கிடை வைத்த குன்றி
> தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றாச் சாத்தி
> மின்னிற்றிகழ் சங்கு விளங்குவெண் தோடு காதின்
> மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக
>
> கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
> கொண்டக்கொடு பன்மணி கோத்திடை ஏனக் கோடு
> துண்டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்றோற்
> றண்டைச்செயல் பொங்கிய சன்ன வீரம் தயங்க
>
> மார்பிற்சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்
> தாரிற் பொலி தோள்வலயங்கள் தழைத்து மின்னச்
> சேர்விற்பொலி கங்கணமீது திகழ்ந்த முன்கை
> கார்விற்சிறு நாணெறி கைச்செறி கட்டி கட்டி
>
> அரையிற்சா ணத்துரி ஆடையின் மீது பௌவத்
> திரையிற்படு வெள்ளல கார்த்து விளிம்பு சேர்த்தி
> நிறையிற்பொலி கீளுடை தோல்சுரி கைப்பு றஞ்சூழ்
> விரையிற்றுவர் வார்வசி போக்கி அமைத்து வீக்கி.
>
> வீரக்கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
> சேரத்தொடு கீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
> பாரப்பெரு வில்வலம் கொண்டு பணிந்து திண்ணன்
> சாரத்திருத் தாண்மடுத் தேற்றி வியந்து தாங்கி
>
> அங்கப் பொழுதிற் புவனத்திடர் வாங்க வோங்கித்
> துங்கப் பெருமா மழைபோன்று தண்ணென் றொலிப்ப
> வெங்கட் சினநீடு விலங்கு விலங்கி நீங்கச்
> செங்கைத் தலத்தாற் றடவிச் சிறுநாண் எறிந்தார்

அழகிலும் அறிவிலும் தலைசிறந்து விளங்குவதுபோல அடக்கம் முதலாம் அருமைப் பண்புகளிலும் அவரே பெரியவராக விளங்குகின்றார். "தாதை கழல்வணங்கி" த் தந்தைசொன் மிக்க மந்திரமில்லை எனப் போற்றியதைக் கண்டோம். கடவுளிடத்தே காதல்கொண்டு கண்ணப்பிய தும் கண்டோம். கடவுட் பொறையாட்டியை எதிர் கொண்டழைத்து வேட்டை நினைவில் விரைந்தோடும் போதும் மேலவர்க்குச் செய்வன செய்துபோகும் தகுதியையும் காண்கின்றோம்.

அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடையாட்டி தன்னை
செப்பற் கரிதாய சிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேக மென்ன
மெய்ப்பொற்புடை வேட்டையின்மேற் கொண்டெ
டழுந்து போந்தார்

நல்லாடர் வெறும் வேடனைப் புனைந்துரைக்கின்றார். சேக்கிழாரோ நாகரிக மடைந்த வேடனைப் புகழ்கின்றார். இவரது வேடன் கட்டிய வாரும் மணக்கின்றதென்றால் இன்னும் என்ன சொல்வது?

சேக்கிழார் அன்பு நிலையை விரித்துரைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். தமது கதையின் முடிவிற்கேற்பக் கதையினை உருப்படுத்திக்கொண்டே போகின்றார். கதையினை இவ்வளவு பெரிதாக ஏன் எழுதினார்? அறிவாலும் ஆண்மையாலும் அழகாலும் அரசாலும் செல்வத்தாலும் கல்வியாலும் சிறந்த சிறு பிள்ளை, அரசர்களது பெருங்குடியில் பிறந்து அரச செல்வத்தில் வளர்ந்து எவ்வளவு செல்வமாக வாழ்ந்திருப்பார்? அந்தக் குழந்தை இரவுபகல் துயிலாது இறைவனை எண்ணமாய் நின்று முன்னிருந்த நிலையை அடியோடு மறந்துவிடுவது எவ்வளவு அருமை? தம் முணர்வல்லாய் நிற்றலால் அல்லவா இவ்வரும் பெரும் நிலை வாய்ப்பதாயிற்று. இதனை வற்புறுத்தவே நக்கீரரும் கல்லாடனாரும் கூறிய கதைக்குச் சிறிது முரண் படவும் தமது கதையைச் சேக்கிழார் விரித்துரைத்துப் போகின்றார். தாம்கொண்ட முடிவை நோக்கிய வண்ணமாகவே இருந்து அதற்கேற்ற சொல்லையும் பொருளையும் பொறுக்கி எடுத்துப் போற்றுகின்றார் புலவர் பெருமானாகிய சேக்கிழார்.

அம்மட்டுமா! இயற்கையைப் புனைந்துரைப்பதும் தமது கதைக்கேற்றவாறே யன்றோ இருக்கின்றது. கதிரவன் மாலைக் காலமானதும் மறைகின்றான், ஏன் என்று சொல்கின்றார் சேக்கிழார். இறைவனார் இன்னும் இறைச்சி வேண்டினார் என்று கைகூப்பிக்கொண்டு (கதிரை மறைத்துக்கொண்டு) செல்கின்றானும்.

அன்னஇம் மொழிகள் சொல்லி
அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்கா ளத்தி
மலையினார்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டு மென்னு
மெழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப்
பகலவன் மலையிற் றாழ்ந்தான்.

அவ்விறைச்சி விருப்பினைப் பின்னர் எவ்வண்ணம் நிறைவேற்றிவைத்தான் என்பதை அவன் எழுதலைச் சொல்லும் பாட்டால் விளக்குகின்றார்.

மொய்காட்டும் இருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்டகருந் திரைஎடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்கூட்டி எழும்போதில்,

கதிரவன் எழுகின்றான். இருள் என்னும் வலையை விரித்து விலங்குகளைப் பிடித்துவைத்தான். அவற்றைக் கண்ணப்பர் கண்டறிவதற்காகத் தனது கதிர்கள் என்னும் கைகொண்டு சுட்டிக் காட்டுகின்றானும். எனவே சேக்கிழார் முடிவிலேயே முழுகித் திளைக்கின்றார். இடைப்பிறவரலாக வேறொன்று எண்ணவும் செய்யார்.

கண்ணப்பரை வழிபடு கடவுளாகப் போற்றி வழிபடுவதற்கு ஓர் த்யான ச்லோகம் எனும் வழிபடு முருவ வணக்கமும் கூறுகின்றார் சேக்கிழார் என்றோம். அப்பெரியாருக்கு நமது நாயனார்மேல் இருந்த அன்பிற்கு அளவே இல்லை. சேக்கிழாரும் பெரிய அன்பராதலின் அன்பின் நிலையை உள்ளவாறு உணர்கின்றார். தெய்வப் புலவராதலின் அவ்வன்பு எந்த நிலையிலே தளிர்த்தோங்கி அழகுபெற்று விளங்கும் என்ற நெளிவினைத் திருவருட் பெருக்கால் அறிந்து அதன்படி கதையினைப் பாடிப் போகின்றார். அறுபத்துமூன்று நாயன்மார்களது கதைகளும் அன்பின் பற்பல வேறுபாடுகளை உணர்த்துவனவாகும். அவ்வேறுபாடுகளில் எல்லாம் கண்ணப்பர் அன்பே தலைசிறந்தது; வேறுபிறிதோர் அடையின்றி அன்பு என்று சிறப்பித்துச் சொல்லுதற்குரியது. நாயன்மார்களைச் சேக்கிழார் மறந்தும் ஒருமையால் கூறுபவர் அல்லர். ஆனால் நாடக இயல்பு உணர்ந்தவராதலினால், திண்ணனாது உற்றாரும் பெற்றாரும், நாயனாரோடு பேசுவதாகப் புனைந்துரைக்கும்போது அவர்கள் ஒருமையாகப் பேசுவதுபோலவே எழுதிப் போகின்றார். கண்ணப்ப நாயனாது கதையைச் சொல்லிக்கொண்டு வருகையில் தம்மையும் மறந்து கதையை விட்டு நாயனாரைப் புகழத் தொடங்கி விடுகின்றார். விற்றொழில் கற்றதைச் சொல்லிக்கொண்டு வருகின்றார், "என்னையாளும் கானவர்க்கரிய சிங்கம்", என்று நாயனாரை வழிபடுகின்றார். இறைவனுக்கு இறைச்சியைக் கொண்டுவரச் சென்ற திண்ணனாது வேட்டையைப் புகழ்கின்றார்.

இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனிஇப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறம்
[ஒழிவேன்

என்று தாம்செய்யும் அறவினையைப் புகழ்ந்து கொள்கின்றார். கதை சொல்வோர் தம்மைச் சிறிதும் நினையாது சொல்லிக் கொண்டு போவது மரபு. காதல் மேலீட்டால் இவ்வாறு மரபினை மறந்து அன்பினைக் காட்டிக் கொள்கின்றார் புலவர் பெருமானார். அவ்வாறானால் அவருக்குக் கண்ணப்பரிடத்தே எவ்வளவு அன்பு இருத்தல் வேண்டும்.

இனிக் கதை சொல்வோர் முதல் தொடங்கி முறையாகச் சொல்லி வருவது வழக்கம். சேக்கிழார் தமது கதையின் முடிவினையே எப்பொழுதும் எண்ணி அதன் பெருமையிலேயே ஆழ்ந்திருக்கின்றா ராதலினாலே அதனைக் கதையின் இடை இடையே எண்ணி எண்ணி இன்புறுகின்றார். அவ்விடங்களில் அமைந்து கிடக்கும் உள்ளக் கருத்தைக் கதை முழுதும் படித்த பிறகுதான் நாமறியலாகும். குழந்தைப் பிள்ளையாகத் திண்ணனார் மழலைச் சொல் பழகுவதைக் கூறுகின்றார். பின்னே சிவபெருமான் திண்ணனாது திருவாய் நீரைக் கங்கையின் நீர் எனக் கொண்டு மகிழ்ந்தது மனதிற்கு வருகிறது.

"புண்ணியக் கங்கைநீரில் புனிதமாந் திருவாய்நீர்" என்று பாடுகிறார்.—திண்ணனார் கண்ணில் நீர் கலங்குவதைக் கூறுகின்றார். இருசுடர்களாகிய திங்கள் ஞாயிறு என்கின்ற இரண்டு கண்களையுடைய இறைவனது இரண்டு கண்களிலும் புண்ணீர் ஒழுக, அந்நோயைத் தீர்க்கத் தமது கண்ணைத் திண்ணனார் அகழ்ந்து அப்பியதை நினைத்துக் கொள்கிறார்.

"இருசுடர்க் குறுகண் தீர்க்கு
மெழில்வளர்கண் களிநீர் மல்க"

எனப் பாடுகின்றார். விற்றொழில் கற்பிக்க எண்ணித் திண்ணனாருக்கு நாண்கோலிக் காப்புக் கட்டினார்கள் என்ற கதையைச் சொல்லிக்கொண்டு வருகிறார். திண்ணனார் தமது விற்றிறத்தால் விலங்குகளைக் கொன்று இறைச்சி கொண்டுவந்து அமுதமாக்கித் தந்த வழிபாட்டின் அருமையை நினைக்கின்றார். விற்றிறத்தைப் புகழ்கின்றார். அத்தகைய விற்றிறம் உண்டாக வேண்டி நாண் கோலுவதை உயர்த்திப் பேசுகின்றார். சிவனது வில்லாகிய மேரு பாற்கடலைக் கடைந்தபோது என்ன கொடுத்தது! அந்தோ நஞ்சை யல்லவா கொடுத்ததென்கிறார். அந்த வில்லின் பழியைத் தீர்க்க இந்த வில்லினுக்குக் காப்புகட்டுகின்றார்களாம். உயர்ந்த பாலை இழிந்த நஞ்சமாக்கிய மேருமலை போலாது இழிந்த ஊனை உயர்ந்த அமுதமாக்கும் வில்லொன்று இறைவனுக்கெனத் தேடிக் கொண்டுவந்து காப்புக் கட்டினார்கள் எனப் புகழ்கின்றார்,

பான்மையிற் சமைத்துக் கொண்டு
படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேனலர் கொன்றை யார்தம்
திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சம்
ஆக்கிட அவர்க்கே பின்னும்
கானவூன் அமுத மாக்கும்
சிலையினைக் காப்புச் சேர்த்தார்.

மேலே வேட்டையாடப் போவதை விரித்துரைக்கின்றார். பற்றாகிய வலையை அறுத்தெறியப் போவார் முன்னே வலைகளைக்கொண்டு வேடர்கள் வந்தார்கள் என்கின்றார்.

போர்வலைச் சிலைத்தொழிற் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க வரும் ஐயர் தம்முனே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினார்.

அழியாததோர் அறிவுநிறைந்த அன்பின் பார்வையால் கடவுளைக்கண்ட கண்ணப்பர் முன்னே வேடர்கள் பார்வை விலங்குகளைக் கொண்டு வந்தனர் என்கின்றார்.

நண்ணிமா மறைக்குலங்கள்
நாடவென்றும் நீடுமத்
தண்ணிலா அரும்புகொன்றை
தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையொன்று
தொண்டுகாணும் அன்பர்முன்
எண்ணிப்பார்வை கொண்டுவேடர்
எம்மருங்கும் ஏகினார்.

இவ்வாறு உவமை கூறுவதும் சிலேடை கூறுவதும் கண்ணப்பர் கதையைப் பற்றியே இருப்பது குற்றமாகாது, குணமேயாகும். கண்ணப்பர் பெருமை யத்தகையது. அதிலீடுபட்டுத் தம்மையு மறந்தார் சேக்கிழார். கண்ணப்பரைக் கடவுளாக வழிபடவேண்டி அவரதுஉருவைப் புனைந்துரைத்தார் சேக்கிழார்என்றால் அவர் கண்ணப்பர் கதையில் ஈடுபட்டமையை எங்ஙனம் புகழ்வது?

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப் படலம்.

(717-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூனியேனுஞ் சோல்வளேன்று கூசினு னிராகவன்.

தம் உயிர்க்கே துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளாள் தாடகை, உண்மையே. பெண் இவள் ஆனால் பின் ஆண்மை என்னுமது யாரிடை வைகுமென் பதயிர்த்தற் பாலதே. அற்றம்நோக்கி முன் அரியும் ஆகண்டலனும் பெண்பாலரைக் கொன்றுமுளர். செய்தொழில் கருதுங்காற் கூற்றினும் புதிய கூற்று இத்தாடகை. இவளைக்கொல்வது முறையன்றென்று வாளா இருத்தல் எளிமையன்றி வீரமன்று. இவையெலாம் கோசிகன் எத்துணைக் கெத்துணை ஊக்கத்தோடு வகுத்துக் காட்டினானோ அத்துணைக்கத்துணை சாந்தமாய் நின்றனன் இராமன். எது எவ்வாறிருப்பினும் தன்னுடைய பொறுப்பிலே ஒரு பெண்ணை அடர்ப்பதற்கிணங்குவது அவனுக் கருமையாயிற்று. விச்வாமித்திரனோ, தான் ஏவி இராமன் இக்கருமம் செய்தான் என்பதைக்காட்டிலும் அவனே சிந்தைபொருந்தி அவ்வரக்கியைத் தன் சுயகருமமாய் வதைக்கும்விதம் நேரும்படி இதுகாறும் முயன்று பார்த்தான். முயற்சி பயன்பட்டிலது. ஆதலால் விதிப்பதே கடனென்று

ஈறி லல்லறம் பார்த்திசைத் தேனிவட்
டேறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்றத றன்ற ரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினான்.

["முடிவிலாத் தருமத்தின் தன்மையை வகுத்துனக்குச் சொன்னேனே யல்லாது] இவள்மேல் கோபத்தால் நான் இது செப்புகின்றவனல்லன். இராமனே, நீ சாந்தமாகத் தணிந்து இந்நிலைநிற்கும் பொறையறம் நல்லதே. எனினும், இவ்வரக்கியைக் கொல்" என்று கோசிகன் கூறினான்]

இவ்வாறுதான் இயற்றுதற்கர்த்தா வாகவே அமைவதற்குக் காத்திருந்தான். இராமன். 'ஆறிநின்றது அறன் அன்று' என்று கூறினானோ விச்வாமித்திரன் அல்லது, ஆறிநின்றது அறன் நன்று' உன்று கூறினானோ, என்று நிச்சயமாக நாம் சொல்ல இயலாவகை அத்தொடர் சந்தியுள் மயங்கி நிற்கின்றது. 'இத்தருணம் சாந்தமாயிருப்பது தர்மமல்ல, ஆதலால் இவளைக் கொல்' என ஏவுதலும் பொருந்தும். அல்லாக்கால், "எந்நிலையிலும் சாந்தமாயிருப்பது நலல தர்மமே. எனினும் என்னுரையை மேற்கொண்டு இவளைக்கொல்" என ஏவினானெனினும் அதுவும் பொருத்தமுடையதே. ஆயினும் இராமன் 'அறன்நன்று' எனவே பொருள்கொண்டனன் என்று எண்ண இடமுளது.. ஆதலாற்றான்,

ஐய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேதமெ னக்கொடு
செய்கை யன்றோ வறஞ்செயு மாறென்றான்.

[இராமன் அதைக்கேட்டுத் "தர்மம் அல்லாதனவும் செய்யவேண்டி நேர்ந்தால், அப்படி நேர்ந்ததைச் செய், என்று என்னை நீ கட்டளையிட்டால், மெய்யனே, நினது வார்த்தையே வேதம் என்று மதித்து அதைச் செய்து விடுவதுதானே நான் என் அறத்தைச் செய்கின்ற நெறியாகும்]

என்று சாற்றினன். அல்லவும், என்பதிலுள்ள உம்மை, இறந்தது தழுவியதோடு சிறப்பும்மை. "நல்லன ஏவி ஞல் அதை நான் ஆற்றவேண்டுமென்பதற்கு ஐயமிலது. மற்று நீ அல்லனவே ஏவினும் என்! உன்வாய்வந்தது எதுவேனும் அதையான் என்வரையில் எனக்கு வேத மாகக் கருதிச் செய்திடுவதே என்நிலைக்கு ஏற்றமுறை" என்று இச்செய்கையின் பாரத்தைக் கோசிகனது தலைக் கே வைத்து, அதனால்வரும் பயனிற்கும் அவனையே பாத்திரமாக்கி, இராமன் தாடகையைக் கொல்லுதற்கு உடன்பட்டான்.

இராமன் தனது ஆராயும் உள்ளத்தின் அருமையால் கோசிகன் குறித்ததைத் தான் செய்தல் நீதியென்று துணிந்தானேயன்றி அச்செய்கை அதனளவில் தக்க தென்று நேர்ந்திலன். இரண்டுமென இவன் ஓர்ந்து ஒரு கருமத்திற்கு உடன்படும் நுண்மையைப் பின் தயரதன், "மைந்த, முடிபுனைந்து நீ இவ்வயோத்தியினரசை வகித்துக்கொளல் வேண்டும்" எனக் கேட்டபோது,

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்.

[தயரதன் அவ்வாறு சொல்ல, தாமரைக் கண்ணனாகிய இராமன், அரசின்பால் ஆசையேனும் வெறுப்பேனும் கொள்ளவில்லை. பூபாரத்தை ஏற்கவேண்டியது கடனென்று உணர்ந்தும், அரசன் ஏவியதைத்தான் செய்வதே நீதி எனநினைத்தும், அவ்வாறு செய்ய உடன்பட்டான்]

எனவரும் பாசுரத்தில் நன்கு நோக்கலாம். ஆனால் இங்குக் கோசிகனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நீதியை நினைத்தானேயன்றித் தாடகையைக் கொல்லல் தன் கடனன்றென உட்கினன். இவ்வகையில் இராமன் காட்டிய முன்புத்தி பெரிதும் பாராட்டத்தக்கது. இவ்வாக்கியை இன்று கொன்றால் பின்னர் அவள் கொடுமை யாவும் மறைந்து, அவளை எதிர்த்து வென்ற தன் வீரமும் தோற்றாமல், பெண்ணொருத்தியைக் கொன்றனனென்னும் பழிச்சொல்லே உலகத்துலவும் என்று இச்சிறுவன் அஞ்சியது பொய்க்கவில்லை. ஏனெனில், இராமன் இயற்றிய தீரவீரச் செயல்களில் எல்லாம் இத்தாடகைவதமே முதல்வைத்துக் கொண்டாடத் தக்கதாம். வயதின் இளமையாலும் போரின் முதன்மையாலும் அப்போரிற் கிலக்காயுடைந்த அரக்கியின் ஆற்றலாலும், இராமனது திறல்வலி ஆண்மையைப் புகழ்வோர் யாவரும் இவ்வெற்றியை எடுத்தியம்பாதகல்வது இயற்கையன்று. அதுவுமன்றிக் கோசிகன் படைக்கலன்கள் அருளுமுன் செய்த சாகசச் செய்கை இதுவாதலால் இராமனது சுய ஆற்றலுக்கு இணையிலாச் சான்றாய் இவ்வெற்றி நிற்கின்றது. மந்திரத்தினுதவியும் மாதவனின் அனுக்கிரகமும் எய்துமுன் புயவலியும் விற்றொழிலும் தலைசிறக்கத் தாடகையின் உரமுருவ எய்த வாளி இராமனது ஆண்மையின் இளமையிலென்றால், இதைவிடுத்து அவன் ஆற்றலைப் புகழத்தொடங்குவோர் மறதியால் அவ்வாறு தொடங்குபவ ராகார். இதன் பால் பழுதுளதென்றே அவர் பேசாதகன்றிருத்தல் வேண்டும். மற்று இச்செய்கையைத் தூண்டிய கோசிகன் ஒருவனே அமயம் வாய்த்த இடந்தோறும் இராமனுக்கு இதனைப் புகழென்று புனையக் காண்கிறோம். சாபம் நீங்கி நின்ற அகலிகையின் வரலாற்றை இராமனுக்குக் கூறிய கோசிகன், "மழைவண்ணத் தண்ணலே, மைவண்ணத்தரக்கி போரில் உன் கைவண்ணம் அங்குக் கண்டேன், கால்வண்ணம் இங்குக் கண்டேன்" என்று சோரகப்புகழ்ந்து முடிப்பதுமன்றிப் பின் சதானந்தரிடத்தும் இக்கோமகனை அறிமுகம் செய்துவைக்கும் காலையில்,

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளறான்
இடித்த வெங்குரல் தாடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்றான்.

[தெளிந்த மாதவனே, கேள். இடிபோன்ற கொடிய குரலுடைய தாடகையின் உடலைக் கொன்று முடித்தவனும், என் யாகத்தைக் காத்து முடித்தவனும், உன் அன்னையின் சாபத்தைநீக்கி முடித்தவனும், என் மனதிலுள்ள கவலைகளை ஆற்றி முடித்தவனும், இந்தக் கோமகன்தான்]

என்றெடுத் தோதியதும், அதற்கப்பால் ஜனகனுக்கு இராமனது குலமுறையைக் கிளத்தி முடிக்கையிலும் இவனது வீரத்தோற்றத்தை அம்மன்னனும் தன்னோடு சேர்ந்து வியக்குமாறு,

அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி மாமுருவி மண்ணுருவிற் றொருவாளி.

[ஐயா, ஜனகவேந்தனே, அலைபாயும் கடலனைய உருவமுடைய இவ்வாண்மகனது நீண்டுயர்ந்து திரண்டிருக்கும் புயங்களின் வலிமையை நன்றாகப் பார். கொல்லனுலைபோல் கனல் உமிழ்கின்ற கண்ணுடைய தாடகையின் மார்பைஉருவியது மல்லாமல் அப்புறங்கழன்று மலை உருவி மரம் உருவி மண்ணையும் உருவியது இவன் எய்த ஒருபாணம்]

எனப் பாராட்டியதும் யாவும் இயற்கைக் கிணங்கி நிகழ்கின்றன. ஒருவனை யொருவன் ஒருகருமத்துட் படுத்தினனெனின், அதுவும் அக்கருமத்தின் தன்மை தகவுடைத்தோ அன்றோவெனும் சந்தேகத்திற்குச் சிறிது இடந்தருமாயின், தூண்டியவன் செய்தவனை வியந்து புகழ்வதை எங்கும் காண்கிறோம்.

அல்லாக்கால், செவ்விநேர்ந்த காலையும் கோசிகன் தவிர வேறு யாவரும் இராமனை இத்தாடகையைக் கொன்ற புகழால் புனையாதிருந்ததேன்? இராமனுக்கு முடிசூட்டிட மந்திரம் சூழ்ந்தபோது வசிட்டன் வாயால் தன் புதல்வனது பெருமையைக்கேட்ட தயரதன்,

மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்.

[தன் மகனைப் பெற்றநாளிலும், சிவபிரான் கையாண்ட பெரியவில்லை உடைத்தநாளிலும், மழுவாயுதமுடைய பரசுராமன் அவமானம் அடைந்த நாளிலும், அதிகமான ஒரு சந்தோஷத்தை இன்று எய்தியவனானான்]

என்று காட்டுகின்ற கம்பரும், இராமன் பிறப்பதற்கும் பிஞ்ஞகன் பிடித்த பெருவில்லை இறுப்பதற்கும் இடையே தாடகையின் உரத்தைத் தகர்த்ததைத் தயரதன் சொல்லத்தக்கதாகக் கருதிலன் என விட்டுவிட்டார்.

மற்று, இத்தாடகை வதத்தைக் கோசிகனல்லாது பிறர்வாயால் குறித்தவிடம் இராமாயணத்தில் ஒன்றுளது. அது குறித்துப் பேசியது கூனிய உருவுடைய மந்திரை. இவள், பண்டைநாள் இராகவன் பாணியில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளி அப்பழி முடிக்க இன்று கள்ளம் துள்ளும் உள்ளத்தள், என்பது உண்மையே. ஆதலால் இவள் கூற்று மெய்ப் பொருள் உளதென்று கொள்ளற்பாலதன்று. ஆயினும், அவள் கைகேசியைத் தந்திரத்தால் தன் வயப்படுத்த முயன்ற காலையில்,

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் வீதெனச் சொல்லினள்.

[புருடர்கள் இகழவும், வீரம் பழுதுபடவும் தாடகை என்னும் பெண் சாகும்படி நெறிதவறி வளைத்தவில்லையுடைய இராமன் நாளைக்குக் கிரீடம் தரிப்பான்—இது தான் வரப்போகின்ற வாழ்வு]

என இராமனைப் பழித்தது, அச்செயல் விரோதிகளுக்கேனும் வாயிலக்காய் அமைதற் கேற்றதென்பதை வெளிப்படுத்துகின்றது. தாடகை எனும் தையலாள், என்று இக்கள்ளக்கிழவி பரிவதெல்லாம் அவள் உருவம் போல் உள்ளமும் உரையும் கூனியேயன்றி வேறில்லை. ஆயினும், இவ்வாறிவள் இடித்துரைத்த சொற்களுக்கு வெள்கியேதானோ கைகேசியும் அவளைக்கடிந்தொன்றுரை எதிர் விளம்பிலள்! இன்னபடி பின்னர் வம்போதுவார் வாயை அஞ்சியே கொற்றக் குரிசில் இராகவனும் இச்சழக்கிமீது தன் வரிசிலைகுனிக்கக் கூசினனோ! யாதோ! 'Caesar's wife must be above suspicion' என்று ஆங்கிலத்தில்வழங்கும் வாசகத்தின்கொள்கைக் கிணங்கி இராமன்இந்நாள், கோசிகன் 'கோறி' என்று விதித்து ஏவுங்காறும் தாழ்ந்திருந்த சூழ்ச்சி தக்கதே யாயிற்று. இன்னொருவனின் விலக்கொணா ஏவலாற் செய்ததெனும் நினைவேநின்று அதன்பயன் யாதாயினும் செய்தவன் மனதிற்கேனும் அமைதிதரும்.

இந்நிலையில் இராமன் எண்ணியதெல்லாம் கம்பரும் தன்மனதில் எண்ணியிருக்கின்றார் என்பது இனிவரும் இரண்டொரு பாசுரங்களால் தெரிகின்றது. தாடகையுடன் போர்தொடங்கிய இவனை, "முனி விதியை மேற்கொண்டு நின்றவன்" என்றும், அவன் புரிந்த இப்போரை, "மாமுனி பணிமறாத காகுத்தன் கன்னிப்போர்" என்றும், மீண்டும் மீண்டும் கோசிகனது சொல்விற் கிணங்கியே இது செய்தான் இராமன் என்னும் குறிப்பை வற்புறுத்துகின்றார் கம்பர்.

T. N. சேஷாசலம்.

தமிழ்ப் பாடம் 37.

நள வெண்பா

(707-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

இருவ ருயிரு மிருகையால் வாங்கி
ஒருவன் கொண்டேகுவா னொத்து—வருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக் கொண்டேகி
வீம னகர்க்கே விரைந்து. [ஞன் 75.

பதவுரை.

வரும் - அவர்களோடு வந்த ஒரு
மறையோன் - அந்தணன்,
இருவர் - (நளன் தமயந்தி ஆகிய) இருவர்களுடைய
உயிரும் - உயிரையும்
இரு - இரண்டு
கையால் - கையினால்
வாங்கி - பெற்று
கொண்டு - கொண்டு
ஏகுவான் - போகின்றவன்
ஒருவன் - ஒருவனை
ஒத்து - போல,
கோ - அரசனுடைய
மைந்தனோடு - பிள்ளையோடு
இளைய - அவனுக்குத் தங்கையாகிய
கோதையை - பெண்ணையும்
கொண்டு - அழைத்துக்கொண்டு
விரைந்து - வேகமாக
வீமன் - வீமராஜனது
நகர்க்கு - நகரத்திற்கு
ஏகினன் - போனான்.

கருத்து:—மக்களை அழைத்துக்கொண்டு அந்தணன் அகன்றபோது, நளனும் தமயந்தியும், போவது தம் உயிரே எனத் தளர்ந்து வருந்தினர், என்பது இச்செய்யுளின் கருத்து.

இலக்கணம்.

முதல்வேற்றுமையில்நிற்கின்ற பெயர்ச்சொல் ஒருகாரியத்தைச் செய்கின்ற வினைமுதலைக் காட்டும் என்றோம். செய்யப்படுகின்றது இதுவென்று தெரிவிக்க வேண்டுமாயின் அது இரண்டாம்வேற்றுமையாக மாறும். இனி அக்காரியம் எதனால் அல்லது எதனோடுசெய்யப்பட்டது என்று காட்டும் வேற்றுமை மூன்றாம் வேற்றுமை.

ஒவ்வொரு வேற்றுமைக்கும் எது எது உருபென்றும் அந்த உருபு வந்து என்னவென்ன பொருளைத் தருவிக்கும் என்பதையும் கற்கவேண்டும்.

இரண்டாம் வேற்றுமைக்கு அனேக பொருள்கள் இருக்கின்றன. அவைகளில் ஆறுபொருள்கள் முக்கியமானவை. அவை, ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் உடைமை, என்பன. சாதாரணமாக இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருளைக் காட்டுகின்றபடியால் அந்தப்பொருள் என்ன செய்யப்பட்டது என்று காட்டுவதுதானே கருமமாயிருக்கவேண்டும். செய்யக்கூடிய காரியங்கள் சாதாரணமாக எவை எவை? ஒன்றை உண்டாக்கலாம், அல்லது இல்லாமல் செய்யலாம், அல்லது பெறலாம், அல்லது விட்டுவிடலாம், அல்லது ஒத்து இருக்கலாம், அல்லது உடைத்தாயிருக்கலாம். வேற்றுமை உருபு ஆகிய ஐ வந்தாலும் வராமற் போனு

னும், முன் சொன்ன ஆறுவித பொருள்களில் எதைக் கொண்டிருந்தாலும் அச்சொல் இரண்டாம் வேற்றுமை அடைந்திருக்கிறதென்று சொல்லவேண்டும்.

உதாரணம் :—

விரி .—

(1) தச்சன் பெட்டியைச் செய்தான். அவன் வீட்டைக் கட்டினன். இவன் பயிரை நட்டான்.	ஆக்கல் பொருள்
(2) தச்சன் பெட்டியை உடைத்தான் இவன் வீட்டை இடித்தான் இவன் பயிரை அழித்தான்	அழித்தல்.
(3) இவன் வீட்டைச் சேர்ந்தான் அவன் பிள்ளையைப் பெற்றான் அவன் பிணியை உற்றான்	அடைதல்.
(4) அவன் செல்வத்தை இழந்தான் இவன் வீட்டைவிட்டுப்போனன். அவன் மனைவியைப் பிரிந்தான்.	நீத்தல்.
(5) அவன் முகம் சந்திரனை ஒக்கும் கிளியைப் போல் பேசினன். முத்தைப் போன்ற பல்	ஒத்தல்.
(6) அவன் அழகை உடையவன் இவன் புகழை உடையவன் கல்வியை உடையவர் கற்றோர்	உடைமை

தொகை :—

(1) தச்சன் பெட்டி செய்தான் அவன் வீடு கட்டினன் இவன் பயிர் நட்டான்	ஆக்கல்.
(2) தச்சன் பெட்டி உடைத்தான் இவன் வீடு கட்டினன் அவன் பயிர் அழித்தான்	அழித்தல்.
(3) இவன் வீடு சேர்ந்தான் அவன் பிள்ளை பெற்றான். அவன் பிணி உற்றான்.	அடைதல்.
(4) இவன் செல்வம் இழந்தான் இவன் வீடுவிட்டுப் போனன் அவன்மனைவி பிரிந்துபோனன்.	நீத்தல்.
(5) இவன் முகம் சந்திரன் ஒக்கும் கிளிபோல் பேசினன் முத்துப் போன்ற பல்	ஒத்தல்.
(6) அவன் அழகு உடையவன் இவன் புகழ் உடையவன் கல்வி உடையவர் கற்றோர்	உடைமை.

இரண்டாம் வேற்றுமைக்கு இன்னும் சில பொருள்களும் இருக்கின்றன. ஆனல் இப்பொழுது இதுவரையிற் கற்றால் போதும்.

இந்தச் செய்யுளில்,

உயிரும், என்பது இரண்டாம்வேற்றுமைத் தொகை. அடைதல் பொருளில் வந்திருக்கின்றது.

ஏதுவான். வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஒத்தல் பொருள்.

கோதையை. இரண்டாம் வேற்றுமை விரி. அடைதல் பொருள்.

இந்தச் செய்யுளில், கையால், மைந்தனேடு என்னும் இரண்டு பெயர்ச்சொற்களும் மூன்றும் வேற்றுமை அடைந்திருக்கின்றன. இரண்டாம் வேற்றுமைக்கு உருபு ஐ ஆவதுபோல, மூன்றும் வேற்றுமைக்கு ஆல் ஆன் ஒடு ஓடு, என்பன ஆகும். "தச்சன் மரத்தால் பெட்டி செய்தான்", அல்லது, "தட்டான் பொன்னல் நகை பண்ணினன்," அல்லது, "புலவன் சொற்களால் கவி பாடினன்," "தச்சன் மரத்தை வாளால் அறுத்தான்," "இவ்வழகைக் கண்ணல் பார்த்தேன்", என்னும் உதாரணங்களை ஊன்றி நோக்கினல் ஒன்று புலப்படும். பெட்டி நகை, கவி ஆகிய இப்பொருள்களைச் செய்வதற்குக் கருவியாய் இருந்தன எவை யென்றும்; அறுத்தல் பார்த்தல் ஆகிய இத்தொழில்களைச் செய்வதற்குக் கருவியாய் இருந்தன எவையென்றும், மரம் பொன் சொல் வாள் கண், என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்த ஆல் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு காட்டுகின்றது. அவ்வாறே ஆன்என்னும் உருபும் காட்டும்.

எந்தக் கருவியால் ஒரு பொருள் அல்லது காரியம் செய்யப்பட்டது என்பதைக் காட்டுவதுபோலவே ஆல் என்னும் உருபும் ஆன் என்னும் உருபும் யாரால் செய்யப்பட்டது என்பதையும் காட்டும். அரசனுல் கட்டப்பட்ட கோவில், தச்சனல் செய்யப்பட்ட பெட்டி என்னும் வாக்கியங்களில், ஆல் உருபு சேர்ந்து கருமத்தைச் செய்த கர்த்தாவைக் காட்டி நிற்கின்றது. இது மூன்றும் வேற்றுமைக்குள்ள கர்த்தாவைக் குறிக்கும் பொருள்.

ஆல், ஆன், என்னும் இரண்டு உருபுகளும் கருவி கர்த்தா என்னும் பொருள்களைக் காட்டும். இனி மூன்றும் வேற்றுமைக்கு ஒடு, ஓடு என்னும் வேறு இரண்டு உருபுகளும் இருக்கின்றன. இவைகளுக்கு உள்ள பொருள் உடனிகழ்ச்சிப் பொருள். அதாவது, ஒன்றோடு ஒன்று உடனுகச் சேர்ந்து வருவதைக் குறிப்பதாம். அரசனேடு மந்திரிகளும் வந்தனர். அவன் கோபத்தோடு பேசினன். பிள்ளையோடு விளையாடும் நாய். இவ் வாக்கியங்களிலுள்ள உடன் நிகழ்ச்சிப் பொருள் எளிதில் விளங்கும்.

கையால், என்றது இங்கு மூன்றும் வேற்றுமை கருவிப் பொருள். மைந்தனேடு என்பது மூன்றும் வேற்றுமை உடன் நிகழ்ச்சிப் பொருள்.

இரண்டாம் வேற்றுமையைப் போலவே மூன்றும் வேற்றுமையிலும் உருபு விரிந்து வந்தாலும் மறைந்து நின்றாலும் நிற்கலாம். தலை வணங்கினன் என்பது, மூன்றும் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம். இது விரிந்தால், 'தலையால் வணங்கினன்' எனவரும்.

காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை யெனநின் றுயிர்ப்போட—யாதும்
உரையாடா துள்ள மொடுங்கினன் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து. 76.

பதவுரை.

வண்டு - வண்டுகள்
விரை - (பூவிலிருந்து வருகின்ற) வாசனையில்
ஆடும் - முழுகித் திரியும்
தாரான் - மாலையை அணிந்த நளன்,
காதலவர்மேலே - அந்தணரோடு அகல்கின்ற மக்களின்மேல்
கண் - தன் கண்ணினது நோக்கம்
ஓட - செல்லவும்,
விண் - ஆகாயத்தில்
ஓடும் - அடித்து ஓடுகின்ற
ஊதை என - காற்றைப்போல
நின்று - விட்டு விட்டு
உயிர்ப்பு - பெருமூச்சு
ஓட - ஓடவும்,
மெலிந்து - தளர்ந்து
யாதும் - எதுவும்
உரைஆடாது - பேசாமல்
உள்ளம் - மனம்
ஒடுங்கினன் - சோர்ந்து போனன்.

மக்களைப் பிரிந்தபின் நளனும் தமயந்தியும் போய் ஒரு பாலைநிலத்தை அடைந்தனர் என்பதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காவிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான்-ஞாலஞ் [சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம். 77.

முன் எருமையாய்ப் புட்கரனைச் சுமந்துவந்து பின் கவறுக உருண்ட கலி, அந்த வனத்தில் ஒரு பொன்னிறப் பறவையாய் இவர்களுக்கு எதிரே இப்பொழுது தோன்றினன் என்பதைக் கீழ்வருஞ் செய்யுள் கூறுகின்றது.

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்— [நன்னெறிக்கே
அஞ்சிப்பா ரீந்த வாசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. 78.

பதப்பிரிவு:—கல் நிறத்த சிந்தை கலியும் அவன் முன்பு ஆக பொன் நிறத்த புள் வடிவு ஆய் போந்து இருந்தான் நல் நெறிக்கே அஞ்சி பார் ஈந்த அரசனையும் தேவியையும் வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

அன்வயம்:—கல்நிறத்தசிந்தைக் கலியும்,நல்நெறிக்கே அஞ்சிப் பார்ஈந்த அரசனையும் தேவியையும் வஞ்சிப்பான் வேண்டி அவன்முன்புஆக வனத்துப் பொன்நிறத்த புள்வடிவாய்ப் போந்து இருந்தான்.

பதவுரை.

கல் - கல்லினது
நிறத்த - தன்மையை உடைய
சிந்தை - மனமுடைய
கலியும் - கலிபுருடனும்,
நல் - நல்ல
நெறிக்கே - மார்க்கத்திற்கே
அஞ்சி - பயந்து
பார் - நாட்டை
ஈந்த - (புட்கரனுக்குக்) கொடுத்த
அரசனையும் - நளவேந்தனையும்
தேவியையும் - அவன் மனைவியாகிய தமயந்தியை [யும்
வஞ்சிப்பான் - வஞ்சிப்பதற்கு
வேண்டி - எண்ணங் கொண்டு,
அவன் - நளனுக்கு
முன்பு ஆக - எதிராக
வனத்து - அவ்வனத்தில்,
பொன் - பொன்னினது
நிறத்த - நிறமுடைய
புள் - ஒரு பறவையின்
வடிவு ஆய் - உருவமெடுத்து
போந்து - வந்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—இரக்கமின்றி இவர்களை மேன்மேலும் வஞ்சித்துக் கெடுக்க வந்தானுகையால் அவனைக் 'கல் நிறத்த சிந்தைக்கலி' என்று அழைக்கின்றார். நிறம், என்ற பதத்திற்கு, மார்பு, ஒளி, குணம், வர்ணம், என்னும் பல அர்த்தங்கள் இருக்கின்றன. இங்குக் குணம் அல்லது தன்மை என்னும் பொருள் ஒன்றே பொருந்தும். கல்லினது தன்மைவாய்ந்த மனமுடைய கலி=கல்போன்ற மனமுடைய கலி, என்று பொருளாம்.

நல்நெறிக்கே அஞ்சிப் பாரீந்தான், என்பதால் அவன் சத்திய தருமத்திற்குக் கட்டுப்பட்டுப் புட்கரனுக்கு நாட்டைவிட்டானே அல்லாது புட்கரனுக்குப்பயந்து அவன் நாட்டைக் கொடுக்கவில்லை என்று தெரிகின்றது. நல்நெறிக்கே, என்பதிலுள்ள ஏகார இடைச்சொல், வேறெக்காரணமும் இல்லை என்று பிரித்து நல்நெறிக்கு அஞ்சியதே காரணம் என்பதைக் காட்டுவதால் அதற்கு இங்குள்ள பொருள் பிரிநிலைப் பொருள் (449-வது பக்கம்.)

குறிப்பு.—'சிந்தைக்கலியும்', என்பதில் 'சிந்தை' என்னும் பெயர்ச்சொல் இரண்டாம் வேற்றுமையில் இருக்கின்றது. வேற்றுமை உருபு ஐ விரிந்து இல்லையாகையால் இது இரண்டாம் வேற்றுமைத் தொகை. (சிந்தை, என்னும் பதத்தின் கடையில் உள்ள ஐ இரண்டாம் வேற்றுமை உருபு அல்ல. மலை, தலை, மதுரை, ஆந்தை, தெரிவை, என்பனபோல் சிந்தை என்பதேபதம்)இது வேற்றுமை உருபைப் பெற்றுத் தோன்றினல் சிந்தையை என்று ஆகும். ஆனல் 'சிந்தைக் கலியும்' என்னும் தொடரில் தொக்கி இருப்பது ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மாத்திரமல்ல. ஏனெனில் அந்த உருபை மாத்திரம் சேர்த்துப் படித்துப் பாருங்கள்; "சிந்தையைக் கலியும்" என்று தானே ஆகும். அப்பொழுது அர்த்தம் இல்லையே. 'சிந்தைக் கலியும்' என்னும் இவ்விரண்டு வார்த்தைகளுக்கு இடையே தொக்கியிருப்பவைகளை விரித்தால் 'சிந்தையை உடைய கலியும்' என்று ஆகும். ஆகையினல் ஐ என்னும் உருபு தவிர உடைய என்னும் சொல்லும் தொக்கி இருக்கின்றதல்லவா! எனவே, இரண்டு பதங்கள் தொடரும்போது, வேற்றுமை உருபு மாத்திரம் தொக்கி இருக்கலாம், அல்லது வேற்றுமை உருபோடுகூட அர்த்தமாவதற்கு அவசியமான வேறுசில வார்த்தைகளும் தொக்கி யிருக்கலாம். வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கியிருந்தால் அந்தத் தொடரை வேற்றுமைத்தொகை என்போம்.உருபோடுகூட வேறு ஓர் வார்த்தையும் தொக்கி யிருந்தால், உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்போம். இப்படி இருவிதமான தொகைகளும் இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு எழு ஆகிய எல்லா வேற்றுமைகளிலும் வரும்.

மீன் விற்றான் :—மீன் என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை. 'மீனை விற்றான்' என்று ஐ உருபை மாத்திரம் விரித்தாலும் அர்த்தம் தெரிகின்றது. ஆகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும்.

மீன் வலை:—இங்கும் மீன்என்பது இரண்டாம் வேற்றுமையில்தான் இருக்கின்றது.ஆனல் 'மீனை வலை' என்று ஐ உருபைமாத்திரம் விரித்தால் பயனில்லை. இந்தத் தொடர் அர்த்தம் ஆக வேண்டுமானல், மீனைப் பிடிக்கும் வலை' என்று பிடிக்கும் என்னும் ஒரு சொல் வருவிக்கவேண்டியது அவசியமாகின்றது. ஆகையால் இது, இரண்டாம் வேற்றுமை உரும் பயனும் உடன்தொக்க தொகை.

இப்படியே மூன்றும் வேற்றுமையிலும் பார்க்கலாம். தலைவணங்கினன் :—இது விரிந்தால் 'தலையால் வணங்கினன்' என்று ஆகும். ஆல் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு மாத்திரந்தான் தொக்கி நிற்கின்றது. ஆகையால் மூன்றும் வேற்றுமைத் தொகை.

மரப் பெட்டி :—இது விரிந்தால்,'மரத்தால் பெட்டி' என்று ஆகாது. 'மரத்தால் செய்த பெட்டி' என்றே ஆகும். செய்த என்ற சொல்லும் மறைந்திருப்பதால் இது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

தேவாரமும் ஐந்திணையும்.

(709-வது பக்கத் தொடர்ச்சி)

2 திணைகளின் மூவகைப் பொருள்.

VII. விலங்கு :—திணைக்கேற்றவாறு ஊர், உணவு வேறுபா டிருத்தல்போல், மிருகங்களும் திணைக்குத் தக்கனவே காணப்படும். மலைவாழ் விலங்குகள் மருதத்திலும் நெய்தலிலும் வரினும் நிலையாயிரா. நெய்தலிலுள்ளன குறிஞ்சி, பாலை, முல்லையிடங்களிற் காணலாகா. அவ்வாறு காணப்படின் திணைமயக்கம் நேரிடும். ஜீவகாருண்ய மென்பது சொல்மாத்திரமா யிராமல்,

நல்ல நினைப்பொழிய நான்களி லாருயிரைக்
கொல்ல நினைப்பதுவுங் குற்றமு மற்றொழியச்
செல்வ வயற் கழனித் தென்றிரு வாரூர்புக் [தே.
கென்னுயிர்க் கின்னமுதை யென்றுகொலெய்துவ
—சுந்தரர்.

என்றபடி "உரைசேரும் எண்பத்துநான்கு நூறுயிரமாம் யோனிபேதம், நிரை சேரப்படைத்தவற்றி னுயிர்க் குயிராய்நின்றான்" பரமனெனக் கண்டு தெளிந்த சைவசமய குரவர், துஷ்ட மிருகங்களைப்பற்றிக் கூறுமிடத்தும் அவற்றினிடம் அன்புசெலுத்தினு ரென்பதை அவர்கள் திருப்பாசுரங்கள் விளக்கும். அவற்றைத் திணைமுறையிற் காண்போம் :—

(i) குறிஞ்சி :—இத்திணைக்கு உரிய விலங்குகள் புலி, யானை, கரடி, பன்றி முதலியன. இவை பெரும்பாலும் துஷ்ட மிருகங்களா யிருப்பினும், அந்நிலவாசிகள் அவற்றிற்குச் சற்றும் அஞ்சார். இவ்விலங்குகள் இயற்கையிற் கிடக்கும் விரோதங்களை அடியிற்கண்ட பாசுரங்களிற் காண்க :—

"வரியசிலை வேடுவர்க ளாடவர்க
ளீடுவரை யூடுவரலால்
கரியினொடு வரியுழுவை யரியினமும்
வெருவு காளத்தி மலையே"
சம்பந்தர்.(திருக்காளத்தி-திருவிராகம்-பண்-சாதாரி8.)

மடந்தை பாகத் தடக்கிம்
மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல்வினை தீர்க்க
நின்றார்க்கிட மென்பரால்
உடைந்த காற்றுக்குயர் வேங்கை
மூத்துதிரக் கல்லறை கண்மேல்
கிடந்த வேங்கை சினமா
முகஞ்செய்யுங் கேதாரமே. —சம்பந்தர்.

முளைக்கைப்பிடி முகமண்சொலி
முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்
நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர
மயின்மான்பிணை நிலத்தைக்
கிளைக்குமணி சிந்துந்திருக்
கேதாரமெ னீரே. —சுந்தரர்.

வாழி யூழி யுணர்வார்கள்
வேதத்தினொண் பொருள்களால்
வாழி யெந்தை யென
வந்திறைஞ்சுமிட மென்பரால்,
மேழி தாங்கியுழு வார்கள்
போலவ்விளை தேரிய
கேழல் பூழ்தி கிளைக்கமணி
சிந்துங்கே தாரமே. —சம்பந்தர்.

ஏனத்திரள் கிளைக்கவெரி போலமணி சிதறத்
தீயென்றவை மலைச்சாரலிற் றிரியுங் காடியும்
மானும்மரை யினமும்மயின் மற்றும்பல வெல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே—
—சுந்தரர்.

(ii) முல்லை :—இத்திணையிலுள்ள காடுகள் சிறியவாகையால் இதிலுள்ள மிருகங்களும், குறிஞ்சிநில மிருகங்களுக்கு ஒப்பிடக்கூடியன வல்ல. இந்நிலத்திற்குரிய மிருகங்கள் உழை, (புள்ளிமான்), முயல், புல்வாய் முதலியன. அதாவது மலையற்ற காடுகளிற் பெரும்பாலும் சஞ்சரிப்பனவாம். இவை துஷ்ட மிருகங்களெனத் தகுந்தனவல்ல. இவை தேவாரத்தில் வரும் சந்தர்ப்பங்களைக் காண்க.

உழையாடு கரதலமென் றுடையான் கண்டாய்
ஒற்றியூ ரொற்றியா வுடையான் கண்டாய்
கழையாடு கழுக்குன்ற மமர்ந்தான் கண்டாய்
கானத்திக் கற்பகமாய் நின்றான் கண்டாய்,
இழையாடு மெண்புயத்த விறைவன் காண்டாய்
யென்னெஞ்சத் துண்ணிங்காவெம்மான் காண்டாய்
குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய்
கோடிகா வமர்ந்துறையுங் குழகன்றானே—அப்பர்.

முயல் வளாவிய திங்கள் வாண்முகத்
தரிவையிற் றெரிவை
இயல் வளாவிய துடைய
வின்னமு தெந்தை யெம்பெருமான்
கயல் வளாவிய கழனிக்
கருநிறக் குவளை கண்மலரும்
வயல் வளாவிய புகலூர்
வர்த்தமா னீச்ச ரத்தவரே. —சம்பந்தர்.

நில்லாய் மனமென்னொடு சூளறும் வைகலும்
நல்லா னலமையாளுடை யானவி னம்மிடம்
வில்வாய்க் கணைவேட்டுவ ராட்டவெருண்டுபோய்ப்
புல்வாய்க் கணம்புக் கொளிக்கும் புனவாயிலே
—சுந்தரர்.

(iii) பாலை—இதில் இருப்பன வலியழிந்த யானை, புலி, செந்நாய் என்பன. இவை துன்பம் விளக்கும் தன்மையித்திணையிலேயே காணலாம்:—

வான்வரி யதளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி
வந்தேனுளமே புகுந்தவதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை
கேழல் கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல வவைநல்ல
நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே.
—சம்பந்தர்.

(iv) மருதம்:—இந்நிலத்திற்கு உரிய விலங்குகள் எருமை, நீர் நாய் முதலியன:—

ஒருமேக முகிலாகி யொத்துலகந் தானு
யூர்வனவு நிற்பனவு மூழிகளுந் தானாய்ப்
பெருமேவு கடலாகிப் பூதங்க ளைந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்

திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க வந்தணர்க ளோது நகரெங்கும்
கருமேதி செந்தா மரைமேயுங் கழனிக்
காளூட்டு முன்னூரிற் கண்டு தொழுதேனே.
—சுந்தரர்.

(v) நெய்தல்:—இந்நில விலங்குகள் பகடு போல்வன; மீன், சுறு, முதலை இவற்றையும் விலங்குகளெனக் கொண்டு இந்நில விலங்குகளென ஆன்றோர் பகர்வர். அவை தேவாரத்தில் கூறப்படும் சந்தர்ப்பங்களை நோக்குக:—

பகடூர் பசிநலிய நோய் வருதலாற்
பழிப்பாய வாழ்க்கையொழியத் தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரு
மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன
திகடூர்ந்த பொய் மொழிகடேற வேண்டா
திருந்திழையாளும் தானும் பொருந்திவாழு
துகடூர் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானைமாடந் தொழுமின்களே.
—சம்பந்தர்.

கழிக்கரைப் படுமீன் கவர்வாரமண்
அழிப்பரை யழிக்கத் திருவுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ் திருவாலவாய்
மழுப்படையுடை மைந்தனே நல்கிடேம்.
—சம்பந்தர்.

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாரும் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரான் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியைத் தொடர் வுற்றோமே.
—அப்பர்.

சுறு, சுந்தரர் தேவாரத்திலும் காண்க :—

சிகரத்திடை யிளவெண்பிறை வைத்தானிடந் தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி பவளத்திர ளோதத்
தகரத்திடை தாழைத்திரண் ஞாழற்றிர ணீழல்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே
—திருமறைக்காடு-பண்-காந்தாரம்.

உரைப்பா ருரையுகந் துள்கவல்லார் தங்களுச்சியாய் !
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய் !
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளையைத்தாச் சொல்லு
காலனையே—சுந்தரர்.

VIII மரம்:—நிலத்திற்குத் தக்க வேறுபாடுகள் மரங்களிலுமுள. தேக்குப்போன்ற பிரம்மாண்ட விருக்ஷங்கள் மலைச்சாரலில் நாம் காணலாமே யொழிய கடலோரத்தில் காணலாகாது. மணல்வெளிகளில் பெரிய மரங்கள் வளரா. தென்னை, பனை, ஈச்சன் முதலிய மரங்களே மணற்பாங்குகளில் உள்ள பெரிய மரங்கள். பறந்தலையில்உயரமற்றதும் மிகவும் முட்கள்நிறைந்தனவுமான செடிகளே காணப்படும். ஏனெனில் இதில் நீர்வள மின்மையே. இவ்வாறு திணைகளின் மரங்களது பேதங்களைத் தேவாரப் பதிகங்களில் மொழிந்தன காண்போம்:—

(i) குறிஞ்சி:—இந்நிலத்திற்கு உரிய மரங்கள். தேக்கு, அகில், வேங்கை, ஆரம் என்பன :—

சந்தமா ரகிலோடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே.
சம்பந்தர்—

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினி னன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி யாங்களைந் தும்மினே டை—

(ii) முல்லை :—இந்நிலத்திற்கு உரிய மரங்கள் கொன்றை, குருந்து என்பனவாம்:—

கொங்குநு ழைத்தன கொன்றையுங் கங்கையும்
திங்களுஞ் சூடுசடை
மங்குநு ழைமலை மங்கையைக் கங்கையைப்
பங்கினிற் றங்க வுவந்தருள்செய்
சங்குகு ழைச்செவி கொண்டரு வித்திரள்
பாயவி யர்த்தழல் போலுடைத்த
மங்கைம முத்திகழ் கையணி டங்கலிக்
கச்சிய னேகதங் காவதமே சுந்தரர்—

உரிந்துய ருருவிலுடை தவிர்ந்தாரு
மத்துகில் போர்த்துழல் வாருந்
தெரிந்துபுன் மொழிகள் செப்பின கேளாச்
செம்மையார் நன்மையா லுறைவாங்
குருந்துயர் கோங்குக கொடிவிடு முல்லை
மல்லிகை செண்பகம் வேங்கை
கருந்தடங் கண்ணின் மங்கைமார் கொய்யும்
கழுமல நகரெனலாமே சம்பந்தர்—

[குறிப்பு—குருந்தின் மலர் கொன்றையைப் போல் சிவ பெருமானுக்கு ஏற்றதாகும். (உ-ம்)

தெரிந்த வடியார் சிவனே யென்று திசைதோறும்
குருந்த மலருங் குரவினலருங் கொண்டேந்தி
யிருந்து நின்று மிரவும் பகலு மேத்துஞ்சீர்
முரிந்து மேகந் தவழுஞ் சோலை முதுகுன்றே.
—சம்பந்தர்.

189020

(iii) பாலை:—இந்நிலத்தில் மரமென் றெடுக்கப்பட்டவை, வற்றின இருப்பை, ஓமை, உழிஞை, ஞெமை, என்பன:—

ஓமையன கள்ளியன வாகையன கூகை முரலோசை
ஈமமெரி சூழ்சுடலை வாசமுது காடு நடமாடித்
தூய்மை யுடையக் கொடரவம் விரவி மிக்கொளி
[துளங்க
வாமையொடு பூணுமடிகள் ளுறைவதவளி வளைவுா
ரே.—சம்பந்தர்.

(vi) மருதம்:—இத்திணைக்குரிய மரங்கள், வஞ்சி, காஞ்சி, மருதம் என்பன :—

வஞ்சி நுண்ணிடை மங்கை பங்கினர்
மாதவர் வளரும் வளர்பொழில்
மஞ்சின் மெல்லடியார்
பயிலும் திருப்பனையூர்
வஞ்சியும் வளர் நாவலூரன் வனப்
பகைய வளப்பன் வன்றொண்டன்
செஞ்சொற் கேட்டுகப்
பாரவரே யழகியரே. —சுந்தரர்.

மனைக்காஞ்சி யிளங்குருகே !
மறந்தாயோ ? மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான்
பலர்பாடும் பழனத்தான்

நினைக்கின்ற நினைப்பெல்லா
  முரையாயோ ? நிகழ்வண்டே!
சுனைக்குவளை மலர்க்கண்ணாள்
  சொற்றூதாய்ச் சோர்வாளோ? —அப்பர்.

அன்னங் கன்னிப் பெடைபுல்கி
  யொல்கி யணிநடைய வாய்ப்
பொன்னங் காஞ்சிம் மலர்ச்சின்ன
  மாலும் புகலூர் தனுண்
முன்னம் மூன்றும் மதிலெரித்த
  மூர்த்திதிறங் கருதுங்கா
லின்ன ரென்னப் பெரிதரிய
  தேத்தச் சிறிதெளியரே. —சம்பந்தர்.

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
  கொய்புன வேனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
  மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
  குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
பாடுமா றறிகிலே னெம்பெரு மானைப்
  பழவினை யுள்ளன பற்றறுத் தானை.
—சுந்தரர்.

மருதம் ஒருவகைப்பூ மரம்:—
தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணத்
  தலமே பேணுதேனாளுஞ் சமணொடு முழல்பவரும்
இட்டத்தா லத்தந்தா னிதன்றதென்று நின்றவர்க்
  கேயாமேவா யேதுச் சொல்லிலைமலிமருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்கு மெய்க்கொள் புத்தரும்
  போல்வார்தாமோ ராமே போய்ப்புணர்வு செய்தவண
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்[றிடங்
  காலே வாரா மேலேபாய் கழுமல வளநகரே
—சம்பந்தர்.

(v) நெய்தல் :—இத்திணைக்குரிய மரங்கள், புன்னை கண்டல் என்பன:—

அரக்கனை விர லாலடர்த் திட்டநீ
  ரிரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
  சரக்க விக்கத வந்திறப் பிம்மினே !
—அப்பர்.

வண்டுபாடல் வளர் கொன்றைமாலைமதி யோடுடன்
  கொண்ட கோலங்குளிர் கங்கை தங்குங்குளிர்ச்சடையு
ளுண்டு போலு மெனவைத்துகந்த வொருவற்கிடம்
  கண்டல் வேலிகழி சூழ்கடனாகைகாரோணமே
சம்பந்தர்—

E. N. தணிகாசலமுதலியார்.

இராமனும் இலக்குமணனும்.

[711 - வது பக்கத் தொடர்ச்சி]

பரதன் இராமனைத் திரும்ப நாட்டிற்கழைத்து வர நாற்பெரும் படைகளோடும் தன் சுற்றத்தார் முதலானவரோடும் புறப்பட்டு வந்து கங்கை நதி தாண்டி இராமனிருக்கும் காடு தேடி வருகின்றான். வருஞ் சேனையின் செந்தூட் படலையையும் ஆர்ப்பையும் இலக்குமணன் முறையே கண்டு கேட்டு ஓர் குன்றின்மேலேறிப் பார்த்தான். கண்டு ;

பரதனிப் படைகொடு பார்கொண் டான்மறந்
  கருதியுட் கிடந்ததோர் கறுவு காதலான்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தானிது
  சரதமற் றிலது,

என்றெண்ணித் தழங்கு சீற்றத்தோடு பாரிடை ஓரேறுதியாகக் குதித்து விரைவில் இராமன்முன்பு வந்து "பரதன் படையுடன் போருக்கு வந்தா" னென்றான். உடனே சரிகை கட்டினான்; கவசம் பூண்டான்; கழலோடு தூணியுஞ் சமந்தான். வில்லேந்தினான்; பிறகு இராமனது அடி வணங்கி, இவ் வீர வசனங்களைக் கூறலாயினான். "அண்ணலே! இருமையு மிழந்த பரதன் தோட்பருமையும் அவனது சேனைப் பெருமையும் உன்னிளையவனாகிய என் ஒருமையுங் கண்டு களிப்பாயாக. குருதியாறு, யானை தேர் குடர் முதலியவைகளை யீர்த்துச்சென்று கடலிற் பாயச்செய்கின்றேன்; என் கணைகளால் எதிரியின் கவச மார்பம் பிளப்பேன். பகைவன் தேர்த்தட்டில் பேய்கள் பாடிக்கொண் டாடுவதைக் காண், வள்ளால்; பரதனது சேனையைக் கொன்று பூபாரந் தீர்ப்பேன்;

"ஆளற, அலங்குதோழிய; ஆடவர்
  தோளற; வரிசிலை துணிய; மாக்கரி
  தாளற; தலையற; புரவி தாளொடும்
  தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டி"

நீதி தப்பிவந்த பரதனை இருநில மான்கை விட்டு அருநானைச் செய்வேன்; 'என் மகனுக்குக் காடாளுதல் வந்ததே' யெனக்கலங்கும் உன் தாயைக் கண்டுகந்த கேகயன் மகள் விழுந்தாற்றச் செய்வேன்; வேலிளுய்! இப்பொழுதொரு சொடிப் பொழுதில் ஓரம்பினால் இப்படையனைத்தையுங் கொன்று தொலைத்து முப்புரமுருங்கச்சுட்ட முதல்வனை யொப்ப விளங்குவன் காண்டி" என்றுகூறினான்.

இங்ஙனம் புகன்று போர்க்கனுமதி வேண்டுங் கோபங்கொண்ட இலக்குமணனது கோபத்தைத் தணிக்க வெண்ணும் சாந்த சீலமுடைய இராமன்

இலக்குவ! உலகமோ ரேழு மேழுநீ
  கலக்குவ னென்பது கருதி னலது
  விலக்குவதரிது; அது விளம்ப வேண்டுமோ?

என்று அவனது குணத்திற்கியைய முதலிற்கூறித் "தோளினாய்; நங்குலத்தில் குற்றமுற்றவ ரொருவருமிலர்; பரதனது செய்கைகள் எல்லா மறைகளாலு மேற்றப்படும் பான்மையுடையன; அப்பெரும் பரதன் என்பாற் காதலால் இங்கு வந்து பூமியைக் கொடுப்பான் வந்தனன் என்றெண்ணுது போருக்கு வந்தானென் றெண்ணுதல் அறிவுக் கடுத்ததோ ?

"சேனுயர் தருமத்தின் தேவை; செம்மையின்
  அணியை; அன்னது நினைக்க லாகுமே
  பூணியன் மொய்ம்பினாய்! போந்தது ஈண்டெனைக்
  காணிய; நீயிது பின்னுங் காண்டியால்"

என்று ஆறத் தணியக் கூறினான். அவ்வளவில் பரதனும் சத்துருக்கனும் இராமன் முன்பாக நடந்து வந்தனர். அது கண்ட இராமன் தன்பால் காதலோடும் வரும் பரதனை இலக்குமணனுக்குச் சுட்டிக்காட்டி ;

"ஆர்ப்புறு வரிசிலை இளைய வைய! நீ
  தேர்ப் பெருந் தானையாற் பரதன் சீறிய
  போர்ப் பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு;

என இடித்துரைப்பதுபோற் கூறினான். இலக்குமணன் இராமன் கூறியதையுங் கேட்டான்; பரதனையும் அமைய நோக்கினான். அவ்வளவில் இலக்குமணன் மனம் முற்றும் திரிந்து,

"மல் லொடுங்கிய புயத்தவனைத் தொழும்
  சொல் லொடும், சினத்தொடும் உணர்வு சோர்தர
  வில்லொடும் கண்ண நீர் நிலத்து வீழவே"

முகம் ஒளியிழப்ப வருந்திச் சோர்ந்து நின்றான். இதனால் இலக்குமணனது கோபத் தன்மையும் இராமனது குணத்தன்மையும் இத்துணைச் சிறப்புடையன வெனவும் இரண்டுக்கு முள்ள ஒற்றுமையும் நன்கறியலாகும்.

இலக்குவனுடைய குணத்தை மற்றொரு உதாரணத்தால் தெளியலாகும். சுக்கிரீவன் இராமனுடன் நட்புப் பெற்றுத் தன் விரோதியான தமையன் பகைமையையும் தீர்த்துத் தாரத்தையுங் கைக்கொண்டு கார்கால முடிவடைந்து வருவதாக இராமனிடம் விடைபெற்றுச் சென்றான். பிறகு குறிப்பிட்ட காலத்தில் சுக்கிரீவன் வாராததால் சீதையின் மீட்சிக்கு ஆத்திரங் கொண்ட இராகவன் இலக்குமணனை நோக்கி "இலக்குவ, சுக்கிரீவன் குறித்துச் சென்ற காலத்தில் வந்திலனே!" என்று கூறினான். அதற்கு இலக்குவன் தன் குணத்திற்கேற்ப;

"வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து
  இம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவில்
  கொம்பு முண்டு ; அருங்கூற் றமுண்டு; உங்கள்
  அம்புமுண்டு; என்று சொல்லும் நம்மானையே"

என்று சுருக்கிக் கூறிவிட்டான். இதைக்கேட்டதும் புகழ்ப் பூணினனான இராமன்; இஃதென்ன காரியமாக முடிந்தது; இவனிடம் நாம் சொன்னது தவறுபோலும், என்று தான் கொண்ட மேம்பட்ட தருமத்திற்கேற்பவும் இலக்குமணனுக்குச் சமாதானமாகவும்;

"நஞ்ச மன்னரை நலிந்தாலது
  வஞ்ச மன்று மனுவழக்கு; ஆதலின்
  அஞ்சிலம்; பதிலொன் றறியாதவன்
  நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்"

என்று சொன்னது மன்றி, "இலக்குவ, நீ கிட்கிந்தை சென்று கைகலத்தல் செய்யாது சுக்கிரீவன் கூறிய பதிலையும் தெரிந்து வந்து சொல்வாயாக" வென்று பொறுமையாகவும் இலக்குவனை மிஞ்சவிடாமலுங் கூறினான். இதைவிட இராமனது பொறுமையையும் கருணையையும், இலக்குவனது ரஜோகுணத்தன்மையும், அதனால் இராமனுக்கு ஏற்படும் சிறப்பும் நன்கறியும் மற்றோர் நிகழ்ச்சி வருமாறு:—

கருணையின் நிலயமான இராமன் இராவணனைக் கொன்று சீதையை மீட்டிவர வானரச் சேனையுடன் சேதுவி லணைகட்டி இலங்கையின் வடக்கு வாயிலைச் சென்றணுகினான். அப்பால் எழுபது வெள்ளம் வானர சேனையையுங் கணித்துக் கள்ளனாகிய இராவணனது வரவை எதிர்பார்த்திருக்கும் கருணையின் கடலாகிய இராமன், தன்னயலில் நிற்கும் விபீஷணனை நோக்கி "வீடண! இப்பொழுது ஒள்ளிய துணர்ந்தேன்! யாதெனின்;

"தூதவனொருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி மாதினை விடுதியோ வென்றுணர்த்தவேமறுக்கு மாயின் காதுதல் கடனென்றுள்ளங் கருதியது; அறனு மஃதே நீதியு மஃதே யென்றான்."

இதைக் கேட்ட விபீஷணன் இம்மாற்றம் அழகுடையதென்றான்; சுக்கிரீவன் அரசர்க்குரிய தருமம் அஃதே யென்றான். ஆனால் இலக்குமணனோ இதற்கு நேர்மாறாகிப் "போரில் பாணங்களை எவிப் பொரு தழிப்பதல்லால் இனிச் சமாதானப் பேச்சுத் தகுமோ? வென்று கூறலாயினான். வாழியாய் ;

"தேசியைச் சிறையில் வைத்தான்;
    தேவருக்கு இடுக்கண் செய்தான்;
  பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்;
    மன்னுயிர் புடைத்துத் தின்றான்;
  ஆசையி னளவு மெல்லா
    உலகமுந் தானே யாள்வான்;
  வாசவன் திருவுங் கொண்டான்;
    வழியலா வழிமேற் செல்வான்."

தவிர, நீ எல்லையற்ற துன்பத்திலாழ மாயஞ் செய்து உன் தேவியான சீதையைப் பிரித்தெடுத்துச் சென்றான். அப்பொழுது எதிரில் வந்து தகைந்த உன் தந்தையான சடாயுவையுங் கொன்றான். அந்த இராவணன் தூதன் சொற்படி சீதையை விடுவானாகில் அவனுக்கு உயிர் கொடுப்பையேல் அன்று சரணாகதி வந்தடைந்த வீடணற்கு "என்னுடை நாம நிற்குமளவெல்லாம் இலங்கை மூதூர் மன்னவன் நீயே" யென்று சொன்ன சொல்லும் சபதமும் என்னாகும் ? நீ கொண்ட தவ வேடத்துக்குத் தக்கபடி உனது சத்துவ குண ஞானத்தினால் அவைகளை மறந்து விட்டாலும் அல்லது இலங்கைமாநகரத்தின் வளமை நோக்கிக் கடந்து செல்லல் தகாதென மனமிரங்கினை யாயினும் ஆய்ந்து பார்த்தால் போர் செய்தலே சிறந்த தரும மாகுமென்று கூறினான்.

இவ்வாறு கூறும் இலக்குமணனது தன்மை கண்டு முறுவல் செய்த இராமன்;

"அயர்த்திலன் முடிவு மஃதே;
    ஆயினு மறிஞ ராய்ந்த
  நயத்துறை நூலி னீதி
    நாந்துறந் தமைதல் நன்றோ?
  புயத்துறை வலியரேனும்
    பொறையொடும் பொருந்தி வாழ்தல்
  சயத்துறை அறனு மஃதே
    என்றிவை சமையச் சொன்னான்"

அதாவது; இலக்குமண, 'யான் மறக்க வில்லை; இனி முடியுந் தொழிலும் அதுவேயாகும்; ஆயினும் நன்மை தரும வழிகளை யுடைய நூற்களிற் கூறும் முறைமையை அவ்வழியில் பிறரையும் நிறுத்தற்குரிய நாம் நீங்கி நடத்தல் நியாயமாகுமா? புஜபல முடையவ ராயினும் பொறுமைக் குணமுடையவராய் வாழ்தல் வெற்றிக்குரிய வழியாம்; செய்யத் தக்க தருமமும் அதுவேயாகு' மென்று மனதிற் பதியும்படி கூறினான்.

இது காறும் இலக்குமணனுக்குக் கூறிய குணம் இராமன் பாலவனுக்கேற்பட்ட அன்பின் மேலீட்டா லேற்பட்டதே யன்றி வேறில்லை. இந்நிலையில் இலக்குமணன் குணத்தை நிலையாக வைத்து அதிலிருந்து இராமனுடைய குணத்திற்கு ஒரு நிலையில் அளவு ஏற்பட்டதேயொழிய இராமன் குணங் கடந்தவனென்றறியத் தக்கதாகும்.

(முற்றிற்று) T. M. கலியாணராமய்யர்.

புரூருவன் தபுதார நிலை.

ஒரு கத்தியம்.

காளிதாச மகாகவி இயற்றிய 'விக்ரமோர்வசீயம்' என்னும் நாடகத்திற் கண்டவொரு சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு இக்கத்தியம் எழுதப்பெற்றுளது. உருப்பசியைக் கவர்ந்துசென்ற கேசியெனும் தைத்தியனை வென்று, அவளை மீட்டிவந்த புரூரவமன்னன், அவள்பால் அடங்காக் காதல் கொண்டனன். அவளுக்கும் இவன்பால் பெருங்காதல் பெருகியது. ஈதுணர்ந்த இந்திரன் அவளை இவனொடு மணம்புகுந்து வாழுமாறளிக்க, இருவரும் கரையிலாக் காதலில் மூழ்கி வைகுநாள் ஒருநாள், மந்தாகினி நதிக்கரையில் விளையாடிநின்ற ஓர் அரமகளைப் புரூருவன் கடைக்கணி னோக்க அதற்காற்றா உருப்பசி அவ்வியத்தால் பிணங்கி அருகிருந்த சோலையை அணுகினள். 'அச்சோலையுட் புக்கமாதர் பூங்கொடி யாகிவிடுக' என்னும்மோர் சாபம் அதன்பால் வசித்த முனிவனொருவன் விதித்திருந்ததால், உருப்பசியும் அவணுற்றவளவில் நாகிள வஞ்சியாய் மாறி மறைந்தனள். இன்னவகைத் தன் காதலியை இழந்த வேந்தன் அவ ளகன்றபரி சறியாமல் பேதுறவெய்திக் கையறு நிலையில் வனமெங்கும் தேடித்தேடி புலம்பலுற்றான். தன்னை நீத்தகன்ற உருப்பசியை நினைத்து நினைத்து உருகுங் காதலுளுழன்ற இவன் உற்றநிலையும் உரைத்த சொற்களும் இவை :—

கலையுங் கலைந்து மனமும் மருண்டு
தலையோ கிமிர்ந்து தாரோ வதங்கி
மலையூ டடர்ந்த வனத்தே தனது
நிலையோ தளர்ந்து நெடிதே யுயிர்த்து,

தேடித்தேடித் தன் காதலுயகியை யெங்குங் காணாப் புரூரவ மன்னன் விண்ணகம் மின்னிப் படர்தரு மேக மொன்றினைக் கறுவினன் நோக்கி,

"நில்நில், நிசாசரக் கொடியோய், சற்றேநில்! ஐயகோ! எனதாம் யாணர் மணூட்டியைப் பற்றியே நீமண்டுமாறெவண்!.........தொடுத்திவ னெய்யுந் தொடைபல வென்றன் மிடல்செறி மார்பின் மேய்வது மொன்றோ!.........மாகங்கிழித்துயர் மலைமுடி நின்றோவென்னுகங் கிழிபட வாசகம் வீசுகின்றாய்............அட கெடுவாய்.........சயிலமே வந்துன்னைச் சாயகத்தாற் சாய்க்கின்றேன், காண்!"

என்னாச் சினந்து கடறோ டெதிர்ப்பான்
மன்னன் மஞ்சென வுணர்ந்து மருளாக்
கண்ணீ ரருவி கலுழ்ந்து தாழ்ப்பப்
பின்னும் பரிவாற் பெரிதும் பகர்வான்.

"காதகஞ் செய்யுஞ் சாதக முமன்று, நட்புடன் நடந்த காத மதுவே! தொலையாப் பகழிதோய் தூணியுமில்லை, இருப்பது மென்னெனி லிந்திரன் தனுவே! தண்ணென் கனாசத் தாரையே பாய்ந்தன, புண்படத் துறக்கும் பூதையு மன்று. ஆ, ஆ! மின்னின் கொடியையோ என்னொரு மாதென மயங்கினன் விரைந்தேன்!"

வணர்சுரி யுளைவிரி மறப்புலி வனசான்
கணைபுகக் கறங்கியே சரிவது நிகர்தா
உணர்வழிக் தொருசிறைப் புரவலன் புவிதனைப்
புணர்ந்திடும் பரிசினிற் புரண்டவ னொழுந்தே

"பித்தன் யானென் மானமர் நோக்கினுளைத் தைத்தியன் யாவனோ பின்னுங் கவர்ந்தா னென்னிக் கலங்கினேன். அதுவும் மழவிளச் சபலையோடு குழைந்தவோ ரொழிவியாய்ப் போயிற்று! மற்றென் செய்வேன்! எத்திசை நாடுவேன்! யாவர்பால் வேண்டுவேன்! உத்தரா முரைப்பாரு மித்தாரதலத்தி லுளர் கொலோ!...

வாமஞ்சேர் வடிவி னுளை மதர்விழி நெடுங்க ணுளைக்
காமஞ்சால் கலையி னுளைக் கடிகமழ் கொடிய னுளைத்
தாமந்தாழ் கழுத்தி னுளைத் தர்ப்பணக் கதுப்பி னுளைத்
தூமஞ்சூழ் குழலி னுளைத் துப்புற ழிதழி னுளை.

.........சீ! சீ! சிரிக்கவோ நானென் செய்தி நோக்கி! கைகடக்க விட்டுவிட்டுக் கதியேது நாடாமலென்சொற் கடந்த கவினுளை வாய்சைசயிப் பையவோ, அம்மம்ம! என்பாவம் யான் பிறந்தேன்!

ஆருயிரின் பேரமிர்தே யஞ்சாயற் சிரனமே
பாரகத்திற் பற்றின்றிப் போயினையோ—வூர்வசியே
நிற்காணு வெய்துயிர்த்தி யான்வாட நீள்காலம்
கற்கண்டே காண்பாயோ வின்று.

"நகையாடு முகமோடென் மனமேடை யிசைபாடி நடமாடும் மடமானே, எங்குற்றாய்? வடலா லுருக்கரந்திப் பொதும்பர்புக் கொளிந்தனையோ! ஏழையே னெற்பிரிந்து தமியளாய்ச் செல்லலென நின் அலவனணி நூபுரச் சிஞ்சித மாற்ற வில்லையோ! மற்றப் பஞ்சிமென்றளிரடி பெயர்த்து நடந்தனா யாயினென் னெஞ்சினை நெகிழ்த்துநின் செஞ்சுவட்டிற் கோரிணை தரைதனிலெங்குங் காண்கிலேன். அன்றேல், புரந்தரன் பொன்னுலக கவயின் பொய்தலிற் றாழ்ந்தனள் கொல்லோ! ஆனதாகுக. மறுசாலென்கைச் சேர்ந்தனவாயி னன்று நோக்குதி! இமையோர் குழாத்தை இரியல்போக்குமத் தானவரெல்லா மணவித் துணிந்தாலுங் கைகழன்றவளைக் கவராவண்ணங் காப்பல்......பொன்னகு மன்னன் சாயலினழகில் வைகலுமன்னிக் களிகூர் செல்வி சேர்ந்தன வென்கண்கள் வெற்றிடந் தடவி வாளாப் புனவோ, ஐயகோ வாயது!

இவ்வண்ணம் பன்னலுற்ற புரூருவன் இன்னலோடாங்கோர் பாறைமிசைச் சென்றமர்ந்தான்.

இருசுடர்க்கு மொருமகனு யிலங்கிநின்ற குலவேந்தன்
உருப்பசியை யறத்துறந்து மதிமாழ்கி யுழல்தோற்றம்
உரைபெருக்கி வரைவதுவோ வொருபோது மெளிதன் [றால்.

கலன்கவிழ்ந்த மீகாம னிவனென்னற் கருத்தாயின்
அவன்விழுந்த சலதிக்கு விழுதொன்று மறியீரோ.

மணியிழந்த பணியென்று மிவனுகான் வெளியன்றி
மனத்துன்னு மொளிர்கின்ற மணியொன்று மறிவீரோ.

உயிர்பிரிந்த யாக்கையெனின் மற்றதனைத் தொடர்ந்தே [கிக்
குயில்செய்யு முடலொன்றைக் கண்டெவரு மறிவாரோ.

புகல்வதெவன்
வெறித்த நோக்கினன் விரிந்த குஞ்சியன்
அணியொ டாடையு மவிழ்ந்த நிலையினன்
கல்லுங் காழ்முதிர் மாமுங் கண்டவை
நெஞ்சம் நெகிழ்ந்துட னுருகு பெற்றியன்
கேசிப்பே ரசுரத் தெவ்வை
வீசிப்போர் வென்ற வேந்தனு மிவனே.

விம்முவான். வெய்துயிர்த்துச் சிலநேரம் பேசாதயர்ந்திருப்பான். துன்னென வேதோ வெண்ணி நடுக்குறுவான். தன்னினைவும் விட்டகல வெற்றுடம்பாய் வீற்றிருப்பான். மெய்விதிர்த்து வியர்வையுண் மூழ்குவான். இன்னலுர் தானுமாய்த் தனித்துயருழந்திடுவான். காலமும் வேனிலாகக் கருத்தழிந் துருகுவான் பின்னுஞ் சில பேசினான்.

"உஞ்ஞற்று மாரஞ் ருட்குவார்த மூழ்த்தல்கண்
டெஞ்ஞான்றும் வெங்கண் விதி."

என்னு மூதுரைக் கிலக்காகிய தன்திறமின்றே தெரியக் கண்டேன்.

மின்னிப் பொழியு மேகக் கூட்ட மொரு பக்கம்
தென்றற் கனற்றுந் தீயின் புதுப்புண் ணொருபக்கம்
அன்றிற் பிரிந்தே யாற்றா தாற்று மொருபக்கம்
துன்றிச் சூழு மருள்தரு மாலை யொருபக்கம்

"என்செய்கேன்! இவைக்கிடையே யெங்ஙன முய்குவேன். இவையெலாங் கூடி யின்றே னெனை யொறுக்கின்றன!

நல்லாளை நங்கையைப் பாகினுந் தித்திக்குஞ்
சொல்லாளைச் சுந்தரியை யான்சேரப்—புல்லியநான்
உடன்புகுந் திவைகடா முறுவித்த வின்பமெலா
மிடம்பெயர்ந் தின்று துன்பமாய் முடிந்தவே.

"வீறுடை மங்காய், என் சேமம் நீ. செல்வத்தோடென்னையுஞ் சேர்த்தாளுந் திருவும் நீ. காமன் செயலுக்குமோர் காப்பு நீயே கண்டாய். உன்னைப் பிரிந்தவென் னற்றங் கண்டன்றோ மன்மதனுர் தன்னனிகத்தோடு மலைகின்றது! என் வாழ்விற் காரணமாய் மெய்யிற்கோர் பரிசையாய் உயிரிற்கு முயருறையாய்ப் பின்னெடுக்கும் பிறவிக்கெல்லாம் நல்லூழ்தானாய் நாரணனே நிற்படைத்துச் சுரபதியே எற்களித்த விம்மிதத் தனிநிதியே, உன்னுறவுந் துணைநலமும் யான் பெற்றால் பின்னிந்த வுருவில்லா வொருவீரன் புறங்காணச் செய்யேனோ!.........

.........இன்மைபு கேன். உயிருள்ளவும் நின்னை நேடி யொடுங்குவேன்.........ஐயகோ! முயற்சியு மின்றே முடிந்தது. சோனைமாரி சொரிகின்றதே! மண்பூத்த கஞ்சம்போல் நின் செம்பாத மலர்ச்சுவடு காணுமலென் கண்பூத்துப் போயினவே, காரிகையே!

"எழிலிக்கணங்காள் கதழ்வுற்றுநீ ரிடையறாப் பொழிவதைச் சற்றே பொறுமினோ பொறுமின். உருட்டிய நும்மசனியெலாந் தாழ்மையே பூண்டவென் சிரமேலுடைக்கவும் வேண்டா. தடியுடைக் கார்கா ளென்வடிவுடைத் திருவைத் தேடித் தருமின். அன்னதன் பின்னர்நுந் தொழும்பன் யான். செறும்பு போமளவு செலுத்தித் தீர்மின்!......நும்மடிமை நாயினேன்......

"ஓ! ஓ! எவ்வமுந் தாழ்மையு மேனிவ ணேற்பது! காலங்கடந்த வாற்றலர் காவன் மன்னவ ரென்பர் கற்றறிந்த வித்தகர்......ஐம்பெரும் பூதத்தி னலகிலா வண்டத்தின் மொய்ம்பெலா மெனதாற்றலா லின்று முற்றுவேன்! காலக் கன்னலைப் பின்னுற வுய்ப்பேன்! மண்ணும் விண்ணும் மேல்கீழுற வுழக்குவேன். இரவியு மிருண்டான். மதியும் பிதிர்ந்தது! நீரோ வெரியும், அனலோ வுறையும்!......மகிதல முழுதாளும் நிருபதி யான் புரூருவன் நடாத்து மாணையின் துணிவிது உறவுற நோக்குமின்......காற்றையுங் கல்லாய்ச் சமைத்திட்டிடுவேன் கண்டீர்......

"அவந்தனுய் முடிந்தேற் கீனையே னுற்றலேன்?... அல்லலில்லா வமைதியி லிவ்வுலகமெல்லாம் வைகுகின்றது. மறுக்கமொன்று யானுற்றா லதற்கு மாறா மற்றிதனை முறுக்குவ தெவன்! இன்பச் சூழ்ச்சி யிவ்வண மெய்தத் துன்பச் சூழ்ச்சி யானோ சூழேன்......திவலையொன்றிரண்டு துமித்தலன்றி வான்சொரி சோனையுஞ் சோர்ந்தது...

குலந்தனி லுயர்ந்த நாகிக் கிளையுடன் குவிந்து நின்ற
நலந்திகழ் தருக்க ளெல்லாம் நண்ணிய தென்ற றன்னை
மலர்முக மலர்ந்து காட்டி மாமனை யழைத்துக் கூவிப்
பலபல வார்த்தை சொல்லிப் பரிவுடன் வைகு மீங்கே.

வந்தவவ் வனிலச் செல்வன் வாழ்வமை மரங்க ளீன்ற
செந்துகு மலர்க ளென்னு மனைவளர் சேய்க ளுக்குப்
பந்திவை பெறுவீ ரென்று பன்னிற னிமிறு நல்கா
உந்தியே யுந்தி யுந்தி யூருவி னசைக்கு மாதோ.

பெருந்தகைக் குலத்தில் வந்த பீடுடை மக்க டாமும்
அருந்துமி னருந்து மென்றே யனைவர்க்கு மளிப்ப ரின்பம்
நிரந்தர மிந்த வாய்மை நினைவினிற் கொண்ட வேபோல்
சுரும்பினைக் காணுந் தோறும் புதுநறாச் சுரக்குஞ் சூனம்.

"ஆதலின், காலக்கதியை நலிந்திடைநான் தகையேன். ஓங்கிய நிருபன் நானென விளங்கக் கொலுவமர் செவ்வியைக் கருத்திற் கொண்மின். விசும்பே விரிந்தெனக்கு விதானப் பரப்பாம். தொங்கலும் பிச்சமு மின்னலிலங்கும் சினைவள ரிணர்நிரை நிறங்கிளர் சாமரையிருபுடை பம்பித் தூங்கின காண்மின். உவகையோடகவும் மஞ்ஞையுஞ் சக்கரமுருட்டுந் தனிக்கோ லுனெனக் கட்டியங்கூறுங் கடிகைமாக்கள். வானுற நிமிர்ந்தவிவ் வரைவீ ழருவிகள் காசும் பொன்னும் கணக்கிலவான்றி யெனக்கிடு திறைப்பொருள் கொள்ளையிலனக்கக் காண்மின்.........

"நன்று, நன்று! சீ, சீ! நன்று! புன்வினைபுக் குழலுஞ் சிறியனேன் நான் எக்கழுதகங் கொள்வதற்கு யாவனே!

இருந்தனத்தின் வைபவமும் வேந்தனெனு மிறுமாப்பும்
சுருங்கிநொய்தின் தொலைந்தகலச் சென்றானே சென்ற
சாசஞ்செய் விலாசனையு மசதிச்சொல் லாசியமும் [கல்க
கருதாமல் தமியேனைத் துறந்தாளே துறந்தகல்க
ஒருபோது முலவாத வின்னருளு மென்மொழியும்
பொருளென்று மதியாமற் போனாளே போயகல்க
மறந்தா ளவளேனு நானவளை மறக்க மாட்டேன்.

இவ்வகை மாறிமாறிப் பொங்கியு மழுங்கியும் புலம்பிய புரூருவனது நிலையை யென்னென் றுரைப்பது.

உலகெலா மொருகோ லோச்சி யும்பருங் காத்த வேந்தல்
சலம்பெரி தாக வுற்றுச் சயிலமுந் தடமுங் காவும்
நிலைதளர்ந் தடியு நொந்து நெடிவத னினைந்தி ரங்கிக்
குலைந்துகு நெஞ்சி னோடுங் குமரியைத் தேடலுற்றான்

"காண்பன வனைத்துமென் கருத்தழி வண்ணமே புரிகின்றனவே. இத்தனிவனத்திலவள் செய்தியா னெவர்பால் பெறுவது கூடும்?

கருத்து ளூறிய வுவகையைக் கார்களுக் குரைப்பான்
விரித்த தோகையை விதிர்விதிர்ப் படைதாக்குலுக்கா
எருத்தங் கோட்டியச் சிலம்பமை மதலையி னிடையே
செருக்கித் தூங்குமச் சிகண்டியை வினவிய செல் [வேன்.
என்று

மாற்றா ருட்கு மடங்க லன்னான்
ஆற்றாத் துயர்க்கோ ரருமிறை யாகித்
துன்றிய தூறு மடவிக் கடமும்
புதரும் காவுஞ் சில்லரிப் போழ்கல்
லதரு மரிதிற் கடந்து காலோ
தளரக் கையறு நிலையிற் சாய்வான்
நிலமே நோக்கி நொய்தின் நீத்துச்
சேணிடை யுற்ற சிறுமதி வனிதைக்
காணவா வுந்தக் களிமயில்
பேணுமா வாங்குப் பெயர்ந்தன னன்றே.

பெயர்ந்தவித் தோன்றல் தோகையைப் பரிவுடன் றெழுது வேண்டுவான்.

பறவாய் பறவாய் வியன்பெரு வியவைப்
பறையா லுழுதே கதழும் பறவாய்
பூமலி பொதும்பரில்
சாமனத் தரையினில்
அதடத் தருகினில்
உவதைக் கெதிரினில்
படிகத் தெளிசுனைக் கருணியின் பாங்கர்
குடினை குலவிய வறற்சிறை யாதல்
தேகயப் பறவாய்
எகிய துண்டேல்
கண்டாய் கொல்லோ யான்பரி யணங்கினைக்
கண்டனை யாயி னறிகுவை மற்றவள்
பகரச் சாயல் பயப்பய நடப்பாள்
மென்விழி மதர்க்கண் தைத்தலு
மறிகுவை யவளெனப் பறவாய்
உரையாய் பறவா யொருசொல் லெனக்கே.

"பதிலொன்றும் பகரவில்லையே......எனைய......... நின்னோ டுரையாடற் கேற்றவ னல்லனோயான்!......சதி மிதிக்கின்றாய்.........என்னிலை கண்டும் நிர்த்தனஞ் செய்ய நினைத்தனையே! இந்நான் நின்னோகைக் குற்ற காரணம் யாவதாங் கொலோ!.........அறிந்தனென்... நின் னுமையானை யிகல்வென்ற சுருளளகவூர்வசியுமிம்பர் விட்டகன்றன ளென்றவோ செக்களிப்போ...மதியிலா மயூரமே......நன்னீல மின்னொடு முன்கழுத்து னென் பாலோ ரீர மில்லையே.ஈண்டினிப் பயனின்று. பிறர் படு துயர் நோக்கிப் பரியாரைச் சிறிதேனும் நினையாமல் நீத்தகல்வேன்........."

T. N. சேஷாசலம்.

மதிப்புரை.

திருக்குறட் குமரேச வெண்பா

மூலமும் - உரையும்

ஆசிரியர்:—ஜகவீர பாண்டியன்,

திருவள்ளுவர் நிலயம்,

தூத்துக்குடி.

"கற்றனைத் தூறு மறிவு," என விளம்பிய வள்ளுவர் தம் நூலே அக்கொள்கையை நாட்டுதற்கு நன்கமைந் திருக்கின்றது. எத்துணையளவு திருக்குறளைக் கற்று ளோரும் பின்னும் சில கற்பதற்கு அதன்பால் ஆழ்ந்திருத் தலால் வள்ளுவரை வழிபற்றி யெழுதுவோர் யாவரும் உலகத்தின் நன்மைக்கு உற்றதுணைவராகின்றனர். இவ் வகைத் துணைநலம்பெற்ற கல்வியுலகம் அன்னதற் காற்ற நினைக்கவல்ல கைம்மாறெலாம் கடந்து இந்நான் நிற்கின் றார் ஜகவீர பாண்டியன். இவ்வறிஞர் எழுதிவருகின்ற "திருக்குறட் குமரேசவெண்பா" என்னும் திப்பிய நூலின் சில பகுதிகள் அனுப்பப் பெற்றோம். அதனைத் திறந்து சில பக்கங்கள் ஓதுதன்முன், "என்னே இப்பெரி யாரது கல்வியினகலமும் அறிவினாழமும் இருந்த வண் ணம்" என்று எம்மைப்போல் யாவரும் இனிதின் வியப் பெய்துவா ரென்பதற் கையமில்லை.

சோமேசர் முதுமொழி வெண்பா பாடியபுலவர், பின் னிரண்டடிகளில் வள்ளுவர் குறளையேயும், முன்னிரண் டடிகளில் அக்குறளின் கருத்திற்கேற்ற ஒரு கதையை யும் அமைத்து, முப்பாலையும் அதிகாரத்திற் கொன்றாக நேரிசை வெண்பா நூற்று முப்பத்துமூன்று குளத்தூர்ச் சோமேசரை முன்னிலைப்படுத்திப் பாடினார் முன்னுள். அம்முறையை மேற்கொண்ட ஜகவீரபாண்டியன் குமரே சரை முன்னிலைப் படுத்தி ஒவ்வொரு குறளிற்கும் ஒவ் வொரு வெண்பா பாடிவருகின்றார். எம் கைக்கு வந்த பகுதிகளிலிருந்து 'ஆள்வினை யுடைமை' என்னும் 62-வது அதிகாரம் வரையில் முடிந்திருக்கின்றதெனத் தெரியலாகின்றது. இந்நூல் யாவர்க்கும் எட்டுமாறு அவர் சென்ற நான்கு ஆண்டுகளாக மாதந்தோறும் தனித்தனிப் புத்தகங்களாக வெளியிட்டு வருடசந்தா நான்கிற்கே யளிப்பதைப் பாராட்டுகின்றோம்.

வெண்பாக்களில் ஓசைநயம் இனிமையாய் அமைந் திருக்கின்றது.குறளிற்கு எடுத்துக்காட்டாகவந்திருக்கும் செய்திகளிற் சில இவ்வாசிரியரின் திறமையை நன்கு புலப்படுத்தும்.

"மண்டலத்தில் வாழ்ந்திருந்தும் வள்ளுவரேன் தெய்வ கொண்டாடப் பட்டார் குமரேசா-உண்டாகும் [மென்று
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று வள்ளுவர் குறளிற்கண்ட வாய்மையை அவரி டத்தே காட்டிவைத்தல் எளியதன்று. மற்று, இராமகதை யினுள் மானுடனொருவனை வைத்துக் கம்பர் புகழ்வது தக்கதோ என்று ஐயமுறுவோர்க்கு அமைதி அளிக்கு மாறு,

மாறில் சடையப்பன் வண்புகழைக் காவியத்தும்
கூறினனேன் கம்பன் குமரேசா—தேறி
எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. என்று

பாடியதும் பெருமையுடைத்து. இன்னபடி எங்கெங்கும் கற்றோர் இதயம் களிக்கும்வகை எண்ணிறந்த செய் யுள்கள் இந்நூலின்கண் நேர்ந்திருக்கின்றன.

இந்நூலிற்கு ஆசிரியரே அருளுகின்ற உரையின் சிறப்புக்களும் அதனால் பெறுவதற்கொத்த பயன்களும் பலவுள. ஒவ்வொரு குறளிற்கும் யாவரும் எளிதில் உண ரும்வகை உரையெழுதி யமைக்கின்றார். பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களின் உதவிகொண்டு உரை தேறுதற்கு வேண்டிய பயிற்சியிலாதார்க்கு இவ்வாசிரிய ரின் உரை பெரிதும் பயன்படும். வெண்பாதோறும் எடுத்தாண்ட கதையை உரைப்பாகத்தில் விரிவாக உரைத்துவைக்கின்றார். இதனால் எல்லாருக்கும் எல்லாக் காவியங்களின் பழக்கமும் பற்பல புராண இதிகாசங் களின் செய்தியும் தெரியவரலாகும். மேற்கோள்களாகப் பல நூல்களிலிருந்து எடுத்தெழுதப் பெற்றுள பாசுரங் கள் படிப்போர்க்குத் தமிழின்பால் ஊக்கமளிக்கத்தக்கன. இவ்வாசிரியது உரைநடையும் அவரது செய்யுளைப் போன்றே செவிக்கினிமை யளிக்குஞ் செவ்வியது. அரிய விடயங்களை இனிமையோடு தெளிவும் பெறச் செப்பும் வன்மை இவர்திறம் பெற்றவர் இந்நான் பல ரிலர். தமிழறிவாளர் யாவரும் இந்நூலைப் பெற்றுப் போற்றிக்கொள விழைகின்றோம்.

இந்நூலின் சிறப்பும் பயனும் இத்துணையாக அதன் ஆசிரியர் பெருமை அளவிடற் பாலதன்று. செய்வதற்கு இயலாத அருமை வாய்ந்த வொன்றைச் செய்ய முயல் பவர்க்கு அம்முயற்சியிலேயே பெருமை யுளது. திருக் குறளின் உட்கருத்தை உணர்தற்கு இவ்வாசிரியர் வகுக் கும் உதாரணங்கள் இன்றியமையாதன என்று நாம் இயம்பத் துணியோம். உண்மையே நோக்கின் இது நூலின் குறையுமன்று. உயரிய தத்துவங்களின்

அலகிலா அகலத்தை ஓரளவு குறுக்கிவைக்கும் குணம் நுண்ணிதி னுய்ந்தமைத்த உதாரணங்களுக்கு முளது. இலக்கண விதிகளை உதாரணம் விளக்கும். தத்துவச் செய்திகளோ உதாரணங்களைக் கடந்த தன் மையன. கடவுளைக் கடவுளென்றே உன்னி அநுபவித் தல் வேண்டும். அக்கடவுள் இன்னபடி இருப்பாரென்று ஓர் உதாரணம் கூறிய நொடியிலேயே அவர் பெருமை பலபடி தாழ்ந்து விடுகின்ற தென்பது யாவரு மறிவர். திருவள்ளுவர் விளம்பிய தெய்வத் தன்மை பொருந்திய தத்துவங்களின் திறமும் அன்னதே. எந்தத் தத்துவத் தின் முழுப் பெருமையும் சிறப்பும் அதற்கென்று அமைத்த உதாரணத் தளவோடு அடங்கிவிடுத லருமை. தத்துவம் உயருமளவு உதாரணங்கள் நிமிரா. ஆதலால், தத்துவத்தை வித்தக மொழிகளால் உரைப்பதோடமை வதே சால்புடைத்து. இல்லையெனில், ஓதுவோர் மன மானது, அவ்வுதாரணத்தின் சிற்றெல்லையுட் சிறைப் பட்டு அங்ஙனே நின்றுவிடுதல் இயற்கை. ஈதுணர்ந்த நுண்மையால் கம்பர்பிரான், தத்துவ சம்பந்தமான விஷயங்களைச் செப்பும்போது அதற்கு உவமையும் உதா ரணங்களும் நாடாமல், பெரும்பான்மை தத்துவங்களை உலகறி செய்திபோல் பாவித்துத் தம் கதையின் நிகழ்ச் சிக்கு, எதிர்நிலையணி யெனும் நலத்தினால், உவமை களாகப் பாராட்டக் காண்கின்றோம்.

தன்னோடு நட்பாடிய ஒருவன் தனக்கொரு தீமை செய நினைத்தானென்பது தெரிந்தபோதிலும், அவ்வா றவன் தீமை செய்ய நினைத்தான் என்பது தனக்குத் தெரிந்ததென்பது அவனுக்குத் தெரிந்தால், செய்யக் கருதிய தீமையும் முடியாமல் வஞ்சனையும் தெரியலா யிற்றே என்று அவன் மனம் உளைவான் என்பது கருதி அத்துணையும் நட்டோர் மனம் நோகப்படாதெனும் தாக்ஷணியத்தினால் ஒருவன் அத்தீமைக்கு, வாய்பேசாது வெளிக்காட்டாது, உள்ளாவதே உயர்ந்த தத்துவம் என் பதைச் சாதிக்கின்ற

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்னும் திருக்குறளிற்கு இவ்வாசிரியர் சிவபிரான் நஞ் சுண்டதையும், மகதநாட்டுக் குறுநில மன்னனுடைய இளையோன் அங்கதன் என்பவன் தன் முன்னோன் ஏவ லால் வைத்த நஞ்சை அருந்தியதையும் உதாரணங்க ளாகக்கூறுகின்றனர்.நஞ்சுண்ணல் என்னும் செய்திதவிர சிவபிரான் செயலிற்கும் இக்குறளின் கருத்திற்கும் வேறு தொடர்பிருப்பதாகத் தோன்றவில்லை யாயினும், அங்க தன் கதையின் பொருத்தமோ யாவராலும் அயிர்க்கப்பால தன்று. ஆயினும் என்! கண்ணோட்டத்திற் கெல்லைதான் இதன்மே லுண்டோ வென்று அத் தத்துவத்தில் நிலை பெற்றிருக்க வேண்டிய நம் கவனம் அங்கதன் கதையால் சிறிது கலைப்புண்டு, உயர்ந்துயர்ந் தோங்குதல் போக்கி நம்மனம் அக்கதையினுள் புக்கடங்கப் பார்க்கின்றது.

(தொடரும்)

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதா ரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தா தாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனி மையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்க ளுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண் டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும் பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக் கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

திருவாங்கூர் மகாராஜாவின் சுற்றுப் பிரயாணம்:— திருவாங்கூர் மகாராஜா, மகாராணியுடன் இந்தியா முழுதும் ஜனவரியில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறார் என்றும் அதுகாலை அவர்கள் இந்தியாவிலுள்ள சுதேச நாடுகள் பலவற்றைப் பார்வையிடுவார்கள் என்றும் தெரிகிறது.

***

ஊருக்குள் கடல் புகுந்தது:—தென் திருவாங்கூரில் வையாற்றங் கரையிலுள்ள புகாருக்குச் சமீபத்தில் கடல் பொங்கி 6 மைல் தூரம் ஊருக்குள் புகுந்து விட்டதாம். இதனால் அருகாமையிலிருந்த கிராமங்கள் அழிந்து போயினவாம். உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

***

ஒரு தினத்திற்கு 1200 மைல்:—பிரிட்டிஷ் ஆகாய விமானியான காப்டன் டிஸ்மோர் என்பவர், லண்டனிலிருந்து ஸ்விட்ஜர்லாந்து சென்று, அங்கிருந்து லண்டனுக்கு ஒரு தினத்தில் திரும்பினாராம். மொத்தம் இவர் ஒருநாளில் பறந்த தூரம் 1200 மைல் என்று தெரிகிறது. இதுவரை எவரும் ஒரு நாளில் இவ்வளவு மைல் பறந்ததில்லையாம்.

***

கெய்ஸர் மைத்துனன் எழுதிய புத்தகம்:—ஜர்மனியின் மாஜி சக்ரவர்த்தியான கெய்ஸரின் தங்கைபுருஷன், 'எனது வாழ்க்கையும் காதல் அனுபவமும்' என்றவொரு நூலை எழுதியுள்ளான் என்றும், பத்திரிகைகள் அதை நன்கு வரவேற்காதிருந்தும் ஏராளமான புத்தகங்கள் விற்கப்பட்டுள்ளனவென்றும், ஒரு விசேஷச் செய்தி கூறுகிறது.

***

அல்பீனியாவில் சுயஅரசாட்சி: — ஹங்கேரியைச் சேர்ந்த அல்பீனியாவில் ஜனங்கள் தங்கள் நாட்டிற்குச் சொந்த அரசாங்கம் வேண்டுமென்று யுத்தத்திற்குப் பின் முயன்று வந்தனர். கடைசியில் இப்பொழுது சொந்த அரசாங்கம் ஏற்படுத்தப் பட்டதென்றும் இந்த அரசாங்கத்தை ஹங்கேரியா அரசாங்கத்தார் ஏற்றனரென்றும் அயல் நாட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.

***

இந்தியா மந்திரியின் புதிய பதவி:—இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அயல் நாட்டு விஷய மந்திரியான லார்ட் காஸ்டினன் என்பவர் ஏதோ வேலையாய் ஜினேவா சென்றிருக்கிறபடியால் அந்த ஸ்தானத்தை வகிக்குமாறு மந்திரி பால்டுவின் இந்தியா மந்திரியான லார்ட் பிர்க்கன்ஹெட்டைக் கேட்டுக்கொள்ள அவரும் சம்மதித்துள்ளார் என்று தெரிகிறது. செப்டம்பர் மாதம் 7-ந்தேதி பிர்க்கன்ஹெட் இப்பதவியை ஏற்றார் என்று டெயிலிமெயில் பத்திரிகை கூறுகிறது.

***

டாக்டர் அன்சாரியின் முயற்சி:—எல்லா இந்திய சர்வகட்சி மஹாநாடுசெய்த முடிவை ஜனங்களிடம்பரப்பி நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்று முயன்று வரும் டாக்டர் அன்சாரி டில்லியில் ஒருகூட்டத்தில் கூறியதாவது:—

"மஹாநாடு செய்த முடிவை நாடு ஏற்கவேண்டும். எல்லாக்கட்சிக்குள்ளும் சமாசம் ஏற்படுத்தியுள்ள முடிவுஇது. இந்தியாவின் குறைந்த கோரிக்கையாகும். சிலஅம்சங்கள் சிலருக்கு ஒவ்வாததாயிருக்கலாம்,எனினும் இதையாவது பெற எல்லாரும் ஏகமனதாய் முயலவேண்டும்."

***

மாஜி இந்தூர் மன்னர்:—மாஜி இந்தூர் மன்னர்மீது ஸேவகிபாய் என்னும் மாது, 1,84,000 ரூபாய்க்குப் பம்பாய் ஹைக்கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறாள். வழக்கின் விபரம் வருமாறு:—

1915-ம்-வருஷம் இந்தூர் மன்னரது சிப்பந்திகள் இந்த மாதை இளவரசர் பிறந்தினக் கொண்டாட்டத்திற்கு அழைத்தனராம். அவள் சென்றதும் அவளைப்பாதுகாப்பில் வைத்துக் கொண்டனராம். 11 வருஷம் பாதுகாப்பி லிருந்தாளாம். பம்பாயில் அவளுக்கிருந்த சொத்துக்களையும் மன்னர் எடுத்துக் கொண்டுள்ளாராம்.

***

இந்து மனைவியின் பெருமை:—வங்காளத்தில் சொத்தெல்லாம் இழந்து ஏழையாய் இறந்துபோன ஒரு இந்து கனவானின் மனைவி, சில தினங்களுக்கு முன் தான் சிரமப்பட்டுச் சம்பாதித்த 2000 ரூபாயைக் கல்கத்தா ஹைக்கோர்ட்டில் கட்டிக் கூறியதாவது:—

"எனது புருஷன் வங்காள நேஷனல் பாங்கில் கடன் வாங்கியிருந்தார். காலகதியால் கடனைக் கொடுக்க முடியாது போயிற்று. இறந்தும் போய்விட்டார். கடன் கொடுக்கும் காலம் தவறிவிட்டது. என்றாலும் எனது புருஷனின் ஆத்ம க்ஷேமத்திற்காக இதைக் கோர்ட்டார் ஏற்றுப் பாங்கிற்குச் சேர்த்துவிடவேண்டும்."

இதைக்கேட்ட ஜட்ஜி ஆச்சரியமுற்றுப் பணத்தை ஏற்றாராம்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளி வந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனும். டெலிபோன் செ. 3811.

189020

ESSEX SUPER-SIX CARS.

THE ESSEX OF TO-DAY IS THE WORLD'S GREATEST MOTOR CAR VALUE.

A SMASHING CONVICTION GRIPS YOU WHEN FIRST YOU BEHOLD THE NEW ESSEX SUPER-SIX

A WEALTH OF COSTLY CAR DETAIL—NEVER BEFORE DREAMED OF IN THIS PRICE CLASS—BECOMES AT ONCE APPARENT.

You cannot mistake this impression of completeness and fine quality in the design of every detail. And you cannot forget that item after item brings you direct to costly cars to find comparison.

Such things as Radiator Shutters, Bendix Four Wheel Brakes: A costly Car type: Oversize Tyres: Worm and Tooth Disc Steering Mechanism—these are merely typical of scores of details in which the new Essex Super-Six Duplicates costly car practise. The great accumulation of new valves has been obtained without a price advance.

May we Demonstrate this Greatest Essex to You!

A Ride places you under No Obligation.

Price: Touring Rs. 3,600 Sedan Rs. 3,900

THE MADRAS WAREHOUSE,

MADRAS, BANGALORE, TRICHINOPOLY.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)